

# பெரியோர் வாழ்விலே

## சுவையான நிகழ்ச்சிகள்

அழ. வள்ளியப்பா

( முதல் தொகுதி )


# பெரியோர் வாழ்விலே

## சுவையான நிகழ்ச்சிகள்

(முதல் தொகுதி)

(தமிழக அரசினர் பரிசு பெற்ற நூல்)

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா



விற்பனை உரிமை:

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

# பதிப்புரை

**செ**ந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியரின் சிறந்த பத்திரிகையாகத் திகழ்ந்தது **பூஞ் சோலை**. அதன் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றிய வள்ளியப்பா அவர்கள், நம் தாயகத்தின் தனிப்பெரும் பெரியோர்கள் பலரின் வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து எழுதி வந்தார்கள். புது முறையிலே கையாளப்பட்ட அந்தக் கட்டுரைகளுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. குழந்தைகளுக்குப் பெரிதும் பயன்படும் என்ற எண்ணத்துடன் இப்புத்தகத்தில் ஏழு பெரியார்களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைத் தந்துள்ளோம். தொடர்ந்து இதேபோல் மற்றும் பல பெரியார்களின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளையும் வெளியிடக் கருதியுள்ளோம்.

இவற்றை வெளியிட இசைவு தந்த ஆசிரியருக்கும், 'பூஞ்சோலை' நிர்வாகிகளுக்கும் எங்கள் நன்றி.

சென்னை,
3-6-55.

**பதிப்பாளர்**

| | | |
|---|---|---|
| Title | : | PERIYOR VAZHVILE SUVAIYANA NIGALCHIKAL |
| Subject | : | Biography |
| Author | : | AL. Valliappa |
| Illustrator | : | Sagar |
| Publisher | : | Kulandai Puthaka Nilayam, Madras-40 |
| Sole Distributors | : | Paari Nilayam, Madras-1 |
| Printer | : | Jeevan Press, Madras-5 |
| Eighth-Edition | : | May, 1983 |
| Price | : | Rs. 3/- |

வெளியிட்டோர்:

**குழந்தைப் புத்தக நிலையம்**

**சென்னை-40**

# உள்ளே உள்ளவை


பக்கம்—5

புலியைத் தேடிப் புறப்பட்டவர்.

பக்கம்—15

எட்டு ரூபாயில் படித்தவர்.

பக்கம்—23

கணக்குப் போடமல் கவிபாடியவர்.

பக்கம்—29

சொந்தக்கையிலே சூடு போட்டுக் கொண்டவர்.

பக்கம்—39

பெயர் தெரியாத கவிஞர்.

பக்கம்—47

சரியான விடைக்குத் தண்டனை பெற்றவர்.

பக்கம்—57

பதிஞேரு வயதில் பாட்டுக் கட்டியவர்.



# புலியைத் தேடிப் புறப்பட்டவர்!

அந்தத் தெருவில் ஒரு நாட்டு வைத்தியரது வீடு இருந்தது. ஒருநாள், அந்த வீட்டின் எதிரிலே பெரிய கூட்டம் ஒன்று கூடி நின்றது.

நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் அக்கூட்டத்தைப் பார்த்தான். உடனே அவனும் அங்கே

ஓடினான்; கூட்டத்திற்குள் நெருக்கிக்கொண்டு நுழைந்தான்; முன்னால் சென்று பார்த்தான்.

தரையிலே ஒரு மனிதன் கிடத்தப்பட்டிருந்தான். அவன் உடல் முழுவதும் பலத்த காயங்கள்! அந்தக் காயங்களிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. நாட்டு வைத்தியர் அவனுக்குச் சிகிச்சை செய்து கொண்டிருந்தார்.

"என்ன விஷயம்? அவர் யார்? ஏன் அவர் உடம்பிலிருந்து இரத்தம் வழிகிறது?" என்று அந்தச் சிறுவன் பக்கத்திலிருந்த ஒருவரைத் திகிலுடன் கேட்டான்.

அதற்கு அவர், "தம்பி, ஊருக்குக் கோடியில் இருக்கிறதே கரும்புத் தோட்டம், அங்கே இந்த மனிதன் போனானும்; அப்போது, ஒரு புலி வந்து இவன் மீது பாய்ந்ததாம்! அதன் பற்களும் நகங்களும் இவனைப் படுகாயப்படுத்தி விட்டனவாம்!" என்றார்.

"பாவம்" என்று கூறிக்கொண்டே அந்த மனிதனிடம் அனுதாபம் காட்டினான், சிறுவன்.

இது நடந்த சில நாட்களுக்குப் பிறகு, ஒருநாள் அந்தச் சிறுவன், வீட்டில் ஏதோ குறும்பு செய்து விட்டான். அதற்காக அவன் அம்மா கோபம் கொண்டு சில கடுமையான வார்த்தைகளைக் கூறி விட்டாள். உடனே, அவனுக்கு அம்மா மீது கோபம் உண்டாகிவிட்டது.

"என்னைப் பார்த்து அம்மா எவ்வளவு கோபமாகப் பேசினாள்! வரட்டும், இதே அம்மா என்னைப்

பார்த்து அழும்படி செய்கிறேன்!'' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

முன்னே ஒருவரைப் புலி கடித்ததே, அந்தச் சம்பவம் அப்போது அவனுடைய ஞாபகத்துக்கு வந்தது. உடனே, ''சரி, நாம் இப்போதே இங்கிருந்து கிளம்ப வேண்டும்; நேராகக் கரும்புத் தோட்டத்துக்குச் செல்ல வேண்டும்; அங்கே, புலி நிற்கும். புலியிடம் சென்று, 'புலியே, உன் கூர்மையான பற்களால் என்னைக் கடி; உன் கத்தி போன்ற நகங்களால் என் உடலைக் கிழி' என்று கூற வேண்டும். உடனே, புலி நம் மீது பாயும்; நன்றாகக் காயப்படுத்தும். இரத்தம் வழியும்!நான் வீட்டுக்குக் காயங்களுடன் கொண்டுவரப்படு வேன். அப்போது, என் அம்மா என்னைப் பார்ப் பாள். பார்த்ததும் என்ன செய்வாள்? என்ன சொல்வாள் ? 'ஆ! என் அருமை மகனே! என் கண்மணியே!'' என்று என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டே கதறுவாள். அத்துடன், 'என் செல்வ மகனே, உன்னை நான் தெரியாமல் திட்டிவிட்டேன்: மன்னித்து விடு. என் கண்ணே' என்று கெஞ்சுவாள். ஆகையால், இப்போதே நான் புறப்படுகிறேன். நேராகக் கரும்புத் தோட்டத்துக்குப் போகிறேன்'' என்று தீர்மானித் தான். தீர்மானித்தபடி உடனே கிளம்பிவிட்டான்; கரும்புத் தோட்டத்தை நோக்கி விரைந்து நடந் தான்.

தோட்டத்தை நெருங்கும் சமயம் காற்று பல மாக வீசியது. 'விர்ர்...! விர்ர்...!' என்று காற்று வீசும் சப்தத்தைக் கேட்டதும், அந்தப் பையன் மனத்தில் அச்சம் ஏற்பட்டது: சுற்று முற்றும்

பார்த்தான். மக்கள் நடமாட்டமே இல்லை. பயம் அதிகமாகிவிட்டது. அதே சமயத்தில், எதிரே புலி வருவது போலவும், அது தன் வாயைப் பிளந்து அப்படியே அவனைக் கடித்து விழுங்கி விடுவது போலவும் அவனுக்குத் தோன்றியது.

அவ்வளவுதான்; 'ஐயோ! புலி! புலி!'' என்று கதறிக்கொண்டே வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்தான்! மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க, வீட்டை அடைந்தான்; அம்மாவிடம் நடந்ததைக் கூறி அழுதான். அம்மா அவனுக்கு ஆறுதல் கூறித் தேற்றினாள்.

'ஒரு காரியத்தை நினைப்பது எளிது; ஆனால், அதைச் செய்து முடிப்பது எளிதன்று' என்பதை அப்போதுதான் அந்தச் சிறுவன் உணர்ந்தான்.

ஃ ஃ ஃ

புலியைத் தேடிப் புறப்பட்டுக் கிலி பிடித்து ஓடி வந்தானே, அதே சிறுவன் குதிரை ஓட்டுவதில் மிகவும் கெட்டிக்காரனாக இருந்தான். ஐந்தாவது வயதிலிருந்தே அந்தப் பழக்கம் அவனுக்கு இருந்தது. அவனுடைய அப்பா, அவனுக்கு ஒரு குதிரை வாங்கிக் கொடுத்திருந்தார். தினந்தோறும் அச்சிறுவன் அந்தக் குதிரைமீது ஏறி ஊரைச் சுற்றி வருவான்.

அன்று பரத்பூர் குதிரைப் பந்தய மைதானத்தில் ஏராளமான கூட்டம் கூடியது. பந்தயக் குதிரைகள் புறப்படுவதற்குத் தயாராக நின்றன.

அதே சமயம், அந்தச் சிறுவன் தன்னுடைய குதிரை மீதேறி கம்பீரமாக அங்கு வந்து சேர்ந் தான்.

அவனைப் பார்த்ததும், அங்கு நின்றவர்களில் சிலர், "தம்பி, நீயும் பந்தயத்திலே கலந்து கொள்ளப்போகிறாயா?...உம், கலந்து கொள். உனக்குத்தான் முதல் பரிசு!" என்று வேடிக்கை யாகக் கூறினர்.

உடனே, அந்தப் பையனுக்கு உற்சாகம் பிறந்து விட்டது. தன்னுடைய குதிரையைத் தட்டி விட்டான். நாலுகால் பாய்ச்சலில் ஓடிக் கொண் டிருந்த பந்தயக் குதிரைகளின் பின்னால், அவனு டைய குதிரையும் வெகு வேகமாக ஓடியது.

ஆனால், அந்தக் குதிரையின் சேணத்தில் கால் வைத்துக்கொள்வதற்கான படிகள் (Stirrups) இல்லை. ஆனாலும், அந்தப் பையன் கீழே விழாமல் தன் முழங்கால்களால் சேணத்தை இறுக்கிப் பிடித் துக் கொண்டான். அதனால், குதிரை தாவித் தாவிச் செல்லும்போது, முழங்கால்கள் சேணத்தில் உராய்ந்தன; இரத்தம் வழிய ஆரம்பித்தது. ஆயினும், அவன் சளைக்கவில்லை. விடாப் பிடியாகக் குதிரையை ஓட்டி, பந்தயத்தை முடித்தே தீர்த்தான். பந்தயத்தில் அவன் வெற்றி பெறுவிட்டாலும், அவனுடைய விடாமுயற்சி யைக் கண்டு எல்லோரும் வியந்தனர்.

'எவ்வளவு துன்பங்கள் இடையிலே வந்தாலும், எடுத்த காரியத்தை எப்படியும் முடித்துவிட

வேண்டும்' என்ற எண்ணம் அவனுக்கு அப்போதே இருந்திருக்கிறது!

ஃ ஃ ஃ

குதிரைப் பந்தயத்தில் கூட்டத்தைத் திகைக்க வைத்தானே, அதே பையன் அடிக்கடி அப்பாவையும் திகைக்க வைப்பது வழக்கம். ஆம், கேள்வி மேல் கேள்வி கேட்டு அப்பாவைத் திகைக்க வைத்துவிடுவான்!

தினந்தோறும், இரவு சாப்பாட்டுக்குப் பிறகு அப்பாவின் அருகிலே போய் அவன் உட்கார்ந்து கொள்வான்: 'அது ஏன் அப்படி இருக்கிறது? இது ஏன் இப்படி இருக்கக்கூடாது?' என்றெல்லாம் கேள்வி கேட்பான். அவர் அவனுடைய கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாகப் பதில் கூறுவார். சில சமயங்களில், அவன் கேட்கும் கேள்விகளுக்கு அவரால் பதில்கூற முடிவதில்லை. அப்போது அவர் திகைப்பார்.

இரவில் அப்பா படுத்த பிறகுகூட அவன் அவரைத் தூங்கவிடமாட்டான். பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டு கேள்விகளை அடுக்கிக் கொண்டே இருப்பான்.

இப்படி, அவன் அடிக்கடி கேள்வி கேட்பது அவனுடைய பாட்டிக்குப் (அப்பாவைப் பெற்றவள்) பிடிக்கவில்லை. "டேய்,ஏன் இப்படி அவனைத் தொந்தரவு செய்கிறாய்? அவனைத் தூங்கவிடமாட்டாய் போலிருக்கிறதே!" என்று கோபித்துக் கொள்ளுவாள். தன் மகனுடைய தூக்கம் கெட்டுப் போகுமே என்று அவள் கவலைப்பட்டாள்!

ஒருநாள், அந்தப் பையன் வெகு நேரம்வரை அப்பாவைத் தூங்கவிடாமல், கேள்விகள் கேட்டுக் கொண்டேயிருந்தான். பாட்டிக்குக் கோபம் வந்து விட்டது. உடனே, ஒரு பெரிய தடியைத் தூக்கிக் கொண்டுவந்து, "டேய்! இப்போது பேசாமல் போய்ப் படுக்கிருயா? அல்லது உதைவேண்டுமா?" என்று மிரட்டினுள்.

உடனே அவன் பேசாமல் போய்ப் படுத்துக் கொண்டான். அத்துடன் கேள்வி கேட்கும் வழக்கத்தையும் விட்டுவிட்டான் என்று நினைத்துவிடாதீர்கள்! மறுநாள் விடிந்ததும், 'அப்பா!' என்று கூவிக்கொண்டே அப்பாவின் அருகிலே சென்ருன். எதற்கு? ஏதோ ஒரு சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வதற்காகத்தான்!

அந்த வயதிலேயே ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நன்ருகத் தெரிந்து கொள்ள அவன் ஆசைப்பட்டான்!

தந்தையைக் கேள்விமேல் கேள்வி கேட்டுத் திணறவைத்தானே, அதே சிறுவன் பல ஆண்டுகளுக்குப் பின் வளர்ந்து விட்டான்; பி.ஏ. படித்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள், அயலூரிலுள்ள ஒரு ஜமீன்தார் வீட்டுக்கு அவன் சென்றிருந்தான். அந்த ஜமீன்தார் அவனுடைய குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவர்.

ஜமீன்தார் வீட்டுக்குச் சென்றிருந்த போது, அவனுக்குக் காய்ச்சல் கண்டது. அந்தக் காய்ச்சலுடன் ஊருக்குச் செல்ல வேண்டும் என்று அவன்

நினைத்தான். பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்த தால், அன்றே செல்ல வேண்டும் என்று ஜமீன் தாரிடம் தெரிவித்தான்.

ஜமீன்தார் சிறிது தயங்கினுர். பிறகு,

"தம்பி, நீ இப்போதே புறப்பட வேண்டுமென் கிருய்...சரி, புகைவண்டி நிலயம் வரையிலாவது உன்னைப் பல்லக்கில் கொண்டுபோய்விட வேண் டாமா? ஆனுல், பல்லக்கு வேறு ஓரிடத்திற்குப் போயிருக்கிறதே! அது எப்போது வருமோ?..." என்ருர்.

"அதனுல் கவலையில்லை. உங்களிடம் குதிரை இருக்குமே, அதைக் கொடுங்கள். அதில் ஏறிப் புகைவண்டி நிலயத்துக்குச் செல்கிறேன்."

"இப்போது ஒரே ஒரு குதிரைதான் இருக்கிறது. அதுவும் முரட்டுக் குதிரை. தன்மீது ஏறுகிறவர் களைக் கீழே தள்ளி மிதித்துவிடும். பொல்லாதது!"

"அப்படியா! சரி, அது எங்கே நிற்கிறது? நான் பார்க்கலாமா?"

ஜமீன்தார் அவனை அழைத்துக் கொண்டு குதிரை நிற்கும் இடத்திற்குச் சென்ருர்.

அங்கே நின்ற முரட்டுக் குதிரையை அவன் பார்த்தான். பிறகு, மெல்ல அதன் அருகே சென்று அதைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தான்.

உடனே, அந்த முரட்டுக் குதிரை முன்னங் கால்கள் இரண்டையும் தூக்கிக்கொண்டு அவனை மிதிக்க வந்தது; பற்களையும் காட்டிப் பயமுறுத் தியது. ஆனுல், அவன் சிறிதும் அஞ்சவில்லை.

சற்றுப் பின் வாங்கினுன். பிறகு,திடீரென்று தாவி அதன்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

குதிரைக்கு உடனே கோபம் வந்துவிட்டது. அந்த இடத்தை விட்டு நாலுகால் பாய்ச்சலில் காற்ருய்ப் பறந்தது.

அவன் அதை அடக்க முயன்ருன். முதலில் முடிய வில்லே. அதற்காக அவன் மனம் கலங்க வில்லே. "ஜமீன்தாரிடம் விடை பெற முடியாமல் போய் விட்டதே !" என்றுதான் வருந்தினுன்.

குதிரை வேகமாக ஓடும்போது, எதிரே ஓர் ஆறு குறுக்கிட்டது. அந்த ஆற்றையும் சாமர்த்திய மாகக் கடந்து எப்படியோ புகைவண்டி நிலேயத் துக்கு வந்து சேர்ந்துவிட்டான்! அவ்விடத்தை நெருங்கியதும் குதிரையிலிருந்து கீழே குதித்தான். அன்றே புகை வண்டியிலேறி ஊர் வந்து சேர்ந் தான்.

வீட்டை அடைந்ததும், காய்ச்சல் அதிகமாகிவிட் டது. மருந்து சாப்பிட்டும்,விட்டு விட்டுக் காய்ச்சல் வந்தது. அத்துடனே அவன் பி. ஏ. பரீட்சை எழுதினுன்; அதில் வெற்றியும் பெற்ருன்!

சிறு வயதிலேயே அவன் இவ்வளவு கெட்டிக் காரனுக இருந்தான் என்ருல் பெரியவனுனதும் அவனேப் பற்றிக் கேட்க வேண்டுமா? மிக மிகக் கெட்டிக்காரனுக, உலகம் போற்றும் விஞ்ஞானி யாகவே அவன் விளங்கினுன்!

'செடி கொடிகளுக்கு உயிரில்லே; உணர்ச்சி யில்லே. ஒரு செடியை நாம் ஊசியால் குத்தினுல்

அது வருந்தாது; கத்தியால் வெட்டினுல், அது துடிக்காது' என்றுதான் உலகம் முழுவதும் நினைத்துக்கொண்டிருந்தது.

ஆனுல், 'செடி கொடிகளுக்கும் மனிதர்களைப் போலவே உயிருண்டு; உணர்ச்சி உண்டு; இன்ப துன்பங்களை அனுபவிக்கக் கூடிய சக்தி உண்டு' என்னும் உண்மையை உலகம் அறிய ஆராய்ச்சி மூலம் எடுத்துக் காட்டியவர் யார் தெரியுமா? **ஜகதீஸ் சந்திர போஸ்** என்ற நம் இந்திய விஞ்ஞானிதான்!

அவருடைய பிள்ளைப் பருவத்தைப் பற்றித்தான் நாம் இவ்வளவு நேரமாகப் படித்தோம்!





# எட்டு ரூபாயில் படித்தவர்!

அந்தப் பையனுக்கு வயது பன்னிரண்டு இருக்கும். அந்த வயதிலேயே அவனுடைய அருமைத் தந்தையார் இறந்துவிட்டார்!

அவன் தந்தையார் மிகவும் குறைந்த சம்பளத்தில்தான் வேலை பார்த்து வந்தார். வருமானம் குறைவாயிருந்தும், தம்முடைய மகனை நன்றாகப் படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டு வர

வேண்டும் என்ற எண்ணத்துடன் சிரமப்பட்டுப் படிக்க வைத்தார். ஆனால், பாவம், அவன் சிறுவனாக இருக்கும் போதே அவர் இறந்து விட்டார்!

"அப்பா இறந்து விட்டார். இனி, நம் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியதுதான். ஏதேனும் ஒரு வேலையில் சேருவதைத் தவிர வேறு வழியில்லை" என்று எண்ணினான் அந்தப் பையன். பல இடங்களில் வேலைக்கு முயன்றான்.

இதைப் பார்த்தார், அந்தப் பையனுடைய அண்ணா. அவருடைய மனம் கலங்கியது. "தம்பிக்கு நல்ல அறிவு இருக்கிறது. நன்றாகப் படிப்பு வருகிறது. அவன் இந்தச் சிறிய வயதிலேயே வேலையில் சேர்ந்தால் படிப்புப் பாழாகி விடும். எப்படியும் அவனைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வந்துவிடவேண்டும்" என்று எண்ணினார்.

ஆனால், அப்போது அவரும் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருந்தார். எங்கெங்கோ அலைந்தார். கடைசியாகப் பதினைந்து ரூபாயில் ஒரு சிறு உத்தியோகம் அவருக்குக் கிடைத்தது. உடனே, தம்பியை மேல் படிப்புக்கு அனுப்பினார். தமக்குக் கிடைக்கும் பதினைந்து ரூபாயில், தம்பியின் படிப்புக்காக மாதா மாதம் எட்டு ரூபாய் அனுப்பி வைத்தார்.

நமக்கு ஒரு சட்டை தைப்பதென்றாலே எட்டு ரூபாய் போதாது! ஆனால், அவன் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டுவதும் அந்த எட்டு ரூபாயில்தான்!

சாப்பாடு சாப்பிடுவதும் அந்த எட்டு ரூபாயில் தான்! சட்டை., வேட்டி வாங்குவதும் அந்த எட்டு ரூபாயில்தான்! புத்தகங்கள் வாங்குவதும் அந்த எட்டு ரூபாயில்தான்!

தானே சமையல் செய்து சாப்பிட்டு வந்தான். ஒரு நாளைக்கு ஒரு வேளை தான் சாப்பிடுவான். மற்ற வேளைகளிலெல்லாம் பட்டினிதான்!

இரவில் படிப்பதற்கு எண்ணெய் வாங்க முடியாது. ஆகையால், தெரு விளக்கின் அடியிலே உட்கார்ந்து பாடம் படிப்பான். தெரு விளக்கிலே படித்தாலும் தன்னுடைய பதினெட்டாம் வயதிலேயே பி. ஏ. பட்டம் பெற்று விட்டான்! தெரு விளக்கில் படிப்பதைப் பற்றிச் சொன்னதும், உங்களுக்கு, சர். டி. முத்துசாமி ஐயர் ஞாபகம் வருகிறதல்லவா? வரும்; வரும்.

இந்தப் பையனும் பிற்காலத்தில் சாதாரண மனிதனாக இருக்கவில்லை. சிறந்த அறிஞர்; உயர்ந்த தலைவர்; பெரிய இராஜதந்திரி; நல்ல பரோபகாரி என்றெல்லாம் புகழப்பட்ட **கோபாலகிருஷ்ண கோகலேதான்**, தெரு விளக்கில் படித்த அந்த ஏழைப் பையன்!

ஃ ஃ ஃ

அன்று கோகலேயின் பள்ளி ஆசிரியர் ஒரு கணக்கைக் கொடுத்து, "பிள்ளைகளே, நாளை வரும் போது இந்தக் கணக்கைப் போட்டுக்கொண்டு வர வேண்டும். சரியாகப் போட்டுக்கொண்டு வர வேண்டும். இல்லையேல் உங்களை நன்றாகத்

தண்டிப்பேன், தெரியுமா?'' என்று எச்சரித்திருந்தார்.

மறுநாள் மாணவர்கள் எல்லோரும் கணக்கைப் போட்டுக்கொண்டு வந்தார்கள். ஆனால், அவர்களில் கோகலே ஒருவர்தான் சரியாகப் போட்டுக் கொண்டு வந்திருந்தார். மற்றவர்கள் எல்லோருமே தவருகப் போட்டிருந்தார்கள்.

உடனே ஆசிரியர் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் எல்லோருமே சுத்த மண்டுகள். கோகலே ஒருவன் தான் இந்த வகுப்பிலே கெட்டிக்காரன்'' என்று கூறினர்.

இதைக் கேட்டதும், கோகலே ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தாரா? இல்லை. அவரது முகத்தில் ஆனந்தத்தின் அறிகுறியாவது தோன்றியதா? அதுவும் இல்லை. அப்படியானல், அவர் என்ன தான் செய்தார்? அழ ஆரம்பித்து விட்டார்! தேம்பித் தேம்பி அழுதார். கண்களிலே கண்ணீர் மளமளவென்று பொங்கி வழிந்தது.

இதைக் கண்ட ஆசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. ''கோகலே, ஏனப்பா கண்ணீர் விடுகிருய்?'' என்று திகிலுடன் கேட்டார்.

''என்னை நீங்கள் கெட்டிக்காரன் என்கிறீர்கள். ஆனல், இந்தக் கணக்கை நானுகப் போடவில்லை; எனக்குத் தெரிந்த ஒருவனுடன் சேர்ந்துதான் போட்டேன். உண்மையில் நான் ஒருவனுகவே இதைப் போட வில்லை'' என்று கூறி மேலும் அழுதார்.

இதைக் கேட்டதும், "அடடா! இந்தப் பையன் எவ்வளவு தூரம் உண்மையைக் கடைப்பிடிக்கிருன்!" என்று எண்ணி எண்ணி வியந்தார் ஆசிரியர். அவர் மட்டுந்தாஞ வியந்தார்? மற்ற மாணவர்களும் வியந்தார்கள்!

ஃ ஃ ஃ

பூஞவில் 'புதிய ஆங்கிலப் பள்ளிக்கூடம்' என்ற ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அது ஒரு தருமப் பள்ளிக்கூடம். அதற்கு அரசாங்கத்தின் ஆதரவு இல்லை; பெரிய மூலதனமும் இல்லை. அப்படியிருந்தும் கோகலே தம்முடைய படிப்பு முடிந்தவுடன் அந்தப் பள்ளியில் ஓர் ஆசிரியராகப் போய்ச் சேர்ந்தார்.

அவர் நினைத்திருந்தால், ஏதேனும் ஒரு பெரிய அரசியலார் பள்ளியில் நல்ல சம்பளத்தில் சேர்ந்திருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. பரோபகார எண்ணத்துடன் பாடுபட வேண்டும் என்று நினைத்தார்.

"புதிய ஆங்கிலப் பள்ளியில் மாதம் முப்பத்தைந்து ரூபாய்தான் அவருக்குக் கிடைத்து வந்தது. மகிழ்ச்சியுடன் அதைப் பெற்று, மாணவர்களுக்கு ஆர்வமுடன் கல்வி கற்பித்து வந்தார்.

அன்றியும், அந்தப் பள்ளிக்கூடத்தை உயர்தரக் கலாசாலையாக்க வேண்டுமென்று நிர்வாகிகள் நினைத்தார்கள். அதற்கு உதவியாக 'தட்சிண கல்விச் சங்கம்' என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்திஞர்கள்.

அந்தக் கல்விச் சங்கத்தில் சேர்ந்து, அதன் வளர்ச்சிக்காக இருபது ஆண்டுகள் உழைப்பது என்று கோகலே சபதம் எடுத்துக் கொண்டார் எவ்வளவோ துன்பங்கள் இடையிலே வந்தன. ஆயினும், அவர் தம்முடைய உறுதியை விட வில்லை. இருபது ஆண்டுகள் அந்தக் கல்விச் சங்கத்தில் ஆசிரியராக இருந்து தம்முடைய சபதத்தை நிறைவேற்றி விட்டார். 1885-ஆம் ஆண்டு முதல் 1904-ஆம் ஆண்டு வரை அவர் அங்கேயே இருந்து அரும்பாடுபட்டு வந்தார்.

ஃ ஃ ஃ

கோகலே ஓய்வு நேரங்களிலெல்லாம் படித்துக் கொண்டேயிருப்பார். ஒரு புத்தகத்தைப் படிக் கும்போது அதில் சிறந்த பகுதி ஒன்று இருந்தால், உடனே மனப்பாடம் செய்துகொள்வார். மனப் பாடம் என்றால், சிலர் நெஞ்சிலே குத்திக் கொண்டு திரும்பத் திரும்ப உரக்கப் படிக்கிறார்களே, அப்படி யல்ல! ஒரு தடவை அல்லது இருதடவை படிப் பார். உடனே, அது அவர் மனத்தில் நன்றாகப் பதிந்துவிடும். கடினமான பாடல்கள், பெரிய அறிஞர்களின் சொற்பொழிவுகள் முதலியவற்றை யும் மனப்பாடம் செய்து வந்தார். இதனால் அவருக்கு அழகாகவும் ஆழ்ந்த கருத்துடனும் பேசும் சக்தி உண்டானது.எவருடன் பேசினாலும் அவர் மிகவும் இனிமையாகப் பேசுவார்; ஆழ்ந்த கருத்துடன் பேசுவார்.

ஒரு நாள் கோகலேயைப் பார்ப்பதற்காக ஓர் ஐரோப்பிய நீதிபதி வந்தார். கோகலேயுடன் ஐந்து

நிமிஷங்களுக்கு மேல் தங்கிப் பேச, அவருக்கு நேர மில்லை. ஆகையால், ஐந்து நிமிஷத்தில் திரும்பி விடுவது என்ற எண்ணத்துடன் கோகலேயைக் கண்டார்.

கோகலே அவரை வரவேற்றுப் பேசிக்கொண் டிருந்தார். கோகலேயின் பேச்சு இனிமையாகவும், நன்ருகவும் இருந்ததால், நீதிபதிக்கு நேரம் போனதே தெரிய வில்லை!

பேச்சு முடிந்து வெளியில் வந்ததும், நீதிபதி கடிகாரத்தைப் பார்த்தார். சரியாக முப்பத்தைந்து நிமிஷங்கள் பறந்துவிட்டன என்பதை அப்போது தான் அவர் உணர்ந்தார்!

ஃ ஃ ஃ

ஆசிரியர் வேலை பார்க்கும்போது, ஆங்கிலம், கணிதம், சரித்திரம், பொருளாதாரம் முதலிய பாடங்களை அவர் மிகவும் அழகாகச் சொல்லிக் கொடுப்பார்.

கோகலே சரித்திரப் பாடம் நடத்தும்போது, முன்காலத்துச் சரித்திரத்தை மட்டும் கூறமாட் டார். தற்போது நம் நாட்டுச் சரித்திரம் எப்படி இருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டுவார். இப்படியாக மாணவருக்கு நாட்டுப் பற்று, தியாக உணர்ச்சி, வீரம் முதலியவற்றையும் ஊட்டி வந்தார்.


ஒரு சமயம்; அவர் கப்பலைப் பற்றியும், கடலைப் பற்றியும் பாடம் நடத்தவேண்டியிருந்தது. கடலைப் பற்றி அவருக்கு நன்ருகத் தெரியும். ஆனால், கப்பலைப் பற்றி அவருக்குச் சரியாகத் தெரியாது.

கப்பலில் உள்ள பாகங்களையும் அவர் பார்த்த தில்லை. அதனால், அவற்றைப் பற்றி மாணவர் களுக்குச் சரியாக விளக்கிக் கூற முடியாது என நினைத்தார். உடனே, அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

பூனாவிலிருந்து மறுநாளே பம்பாய்க்குப் புறப் பட்டார். அங்குள்ள துறைமுகத்துக்குச் சென்றார். துறைமுகத்தில் நின்ற கப்பலுக்குள் அனுமதி பெற்றுச் சென்றார். கப்பலின் ஒவ்வொரு பகுதி யையும் நேரிலே பார்த்தார். அவற்றின் உபயோ கங்களையும் விளக்கமாகத் தெரிந்துகொண்டார். பிறகுதான், பூனாவுக்குத் திரும்பினார்; கப்பலைப் பற்றி மாணவர்களுக்கு மிகவும் அழகாகவும், தெளிவாகவும் விளக்கிக் கூறினார். ஒவ்வொரு மாணவனும் அவர் கற்பித்த பாடங்களை நன்றாகப் புரிந்து கொண்டான்.

கோகலே தமக்குத் தெரியாத ஒரு பொருளைத் தெரிந்ததுபோல் காட்டிக் கொள்ளமாட்டார் என் பதும் எந்த வேலையைச் செய்தாலும் ஒழுங்காகச் செய்வார் என்பதும், மாணவர்களின் அறிவை வளர்க்க மனமாரப் பாடுபட்டார் என்பதும் இதிலிருந்தே தெரிகிறதல்லவா?





# கணக்குப் போடாமல் கவி பாடியவர்!

அப்போது அந்தப் பெண்ணுக்கு வயது பதினைன்றுதானிருக்கும். படிப்பிலே அவள் மிகவும் கெட்டிக்காரியாக இருந்தாள். அவளுடைய அப்பா, "நம்முடைய மகள் ஒரு பெரிய கணித மேதையாகவோ அல்லது ஒரு சிறந்த விஞ்ஞானியாகவோ விளங்க வேண்டும்" என்று ஆசைப்பட்டார். ஆனல், அவர் நினைத்தபடி நடக்கவில்லை!

அந்தப் பெண்ணுக்குக் கணக்குப் போடுவதிலோ, விஞ்ஞான சோதனைகள் செய்வதிலோ

விருப்பமே இல்லை. அடிக்கடி அவள் ஏதாவது கற்பனை செய்துகொண்டிருப்பாள்; கனவு கண்டு கொண்டிருப்பாள்.

ஒரு நாள், அவள் வீட்டிலே உட்கார்ந்து 'அல்ஜீப்ரா' கணக்கு ஒன்றைப் போட ஆரம்பித்தாள். விடை சரியாக வரவில்லை. பல முறை போட்டாள்; பயனில்லை. அவள் கவனம் முழுவதும் கணக்கிலே ஈடுபட்டிருந்தால்தானே விடை சரியாக வரும்? அதுதான் வேறு எங்கேயோ சென்று விட்டதே!

சிறிது நேரம் சென்றது. திடீரென்று அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள். 'மளமள'வென்று ஏதோ சில வரிகளை ஆங்கிலத்தில் எழுதினாள். எழுதி விட்டுப் படித்துப் பார்த்தாள். படித்துப் பார்த்தாளா? இல்லை, இல்லை! கணக்குக்கு விடையாக இருந்தால், 'அவள் படித்துப் பார்த்தாள்' என்று சொல்லலாம். ஆனால், அவள் எழுதியது விடையன்று; ஒரு கவிதை! ஆகையால், அதை 'அவள் பாடிப் பார்த்தாள்' என்றுதானே கூறவேண்டும்? ஆம், அவள் பாடினாள்; உரக்கப் பாடினாள்; குதித்துக்கொண்டே பாடினாள். அவள் பிற்காலத்தில் உலகம் போற்றும் ஒரு சிறந்த கவியரசியாவதற்குரிய அறிகுறி அச் சின்னஞ்சிறு பருவத்திலேயே காணப்பட்டது.

'உலகம் போற்றும் கவியரசி' என்று சொன்னதுமே, 'அவர் யார்?' என்று நீங்கள் கேட்கமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். கவியரசி **சரோஜனி தேவி**யைத் தவிர வேறு யாரை நாம் அப்படிச் சொல்லப்போகிறோம்!

சரோஜனி தேவிக்கு வயது பதின்மூன்று இருக்கும். உடம்பு மிகவும் பலவீனமாக இருந்தது. 'எழுதவோ படிக்கவோ கூடாது; முழுநேர ஓய்வு பெறவேண்டும்' என்பது டாக்டர் உத்தரவு.

சரோஜனிக்கு சும்மா இருக்க முடியவில்லை. அவர் எதையாவது படித்துக்கொண்டும், எழுதிக் கொண்டுமே இருப்பார். டாக்டர் எவ்வளவோ தடுத்துப் பார்த்தார். சரோஜனியின் ஆர்வத்திற்கு அவரால் அணைபோட முடியவில்லை.

சரோஜனியின் அப்பாவும் எவ்வளவோ கூறிப் பார்த்தார்; பயனில்லை. பள்ளிக்கூடம் போவதைக்கூடச் சிறிது காலம் நிறுத்திவைத்தார். ஆனால், அதற்குப் பலன் இல்லாமல் போகவில்லை. சரோஜனி, வீட்டில் இருந்துகொண்டே ஒரு பெரிய கவிதையை எழுதிவிட்டார். 1300 வரிகள் கொண்டது அந்தக் கவிதை! ஆறே நாட்களில் அதை இயற்றிவிட்டார்! அத்துடன் ஒரு நாடகத்தையும் எழுதி முடித்தார்! அப்போது அவர் எழுதிய கவிதை, சர் வால்டர் ஸ்காட் என்ற ஆங்கிலக் கவிஞர் எழுதுவதைப் போல் மிகவும் அழகாகவும், அருமையாகவும் இருந்ததென்று பலர் போற்றினர்; சரோஜனியைப் பாராட்டினர்.

∴ ∴ ∴ ∴

சரோஜனி தேவி உப்புச் சத்தியாக்கிரகத்திலும், சட்ட மறுப்பு இயக்கத்திலும் ஈடுபட்டுச் சிறை சென்றிருக்கிறார்.

அப்போது அவர் ஏரவாடா சிறையில் இருந்தார். சிறையில் இருக்கும்போதே பல மலர்ச் செடிகளை அவர் பயிரிட்டு வளர்த்து வந்தார்.

செடிகள் வளர வளர சரோஜனியின் ஆனந்தமும் வளர்ந்துகொண்டே வந்தது. அவர் தினமும், அதிகாலையில் எழுந்ததும், தாம் வளர்த்த செடிகளைப் போய்ப் பார்த்து மகிழ்ச்சி அடைவார்.

ஒருநாள் சரோஜனி வழக்கம்போல் எழுந்து அந்தச் செடிகளைக் காணச் சென்றார். சில செடிகளில் மொக்குகள் அரும்பி யிருந்தன. அவற்றைப் பார்த்ததும், சரோஜனிக்குச் சொல்ல முடியாத ஆனந்தம்.

"நான் வைத்த செடிகளில் மலர்களைக் காணப் போகின்றேன். இனி நாடோறும் மலர்களைக் கண்டு மகிழலாம்; அவற்றின் மணத்தை நுகர்ந்து இன்பம் பெறலாம்" என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கே வந்தார் சிறை அதிகாரி. "அம்மா, உங்களுக்கு இன்று விடுதலை. வெளியேறலாம்" என்றார்.

இதைக் கேட்டதும், சரோஜனி திடுக்கிட்டார். "என்ன! எனக்கு விடுதலையா? இப்போது அது வேண்டாம். இன்னும் ஒருவாரம் இங்கேயே நான் தங்கிவிட்டுப் போகிறேன். என் அருமைச் செடிகளில் பூக்கும் மலர்களைக் கண்டு இன்பம் பெற ஒரு வாரமாவது வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டார்.

ஆனால், பயனில்லை. விடுதலையானவரை எப்படி அங்கேயே வைத்திருப்பது? கன்றைப் பிரியும் பசுவைப் போல் கலக்கத்துடன் வெளியேறினார், சரோஜனி தேவி.

அது ஒரு பெரிய மண்டபம். அங்கே கவியரசி மாலை 6 மணிக்குப் பேசப் போகிறார் என்பதை அறிந்து பெரிய கூட்டம் கூடிவிட்டது. எள் விழக்கூட இடமில்லை !

அச் சமயத்தில், மின்சாரத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டு விட்டது. விளக்குகள் எரியவில்லை. மக்கள் முகத்தில் ஏமாற்றக் குறி படர்ந்தது.

அப்போது சரோஜனி தேவியும் வந்து விட்டார். இருட்டாக இருப்பதைப் பற்றி அவர் கவலைப்பட வில்லை. நேராகச் சென்று மேடைமீது ஏறினார்; பேச ஆரம்பித்தார். ஆரம்பித்ததும், 'பளிச்' சென்று விளக்குகள் எரிய ஆரம்பித்தன; இருள் விலகிவிட்டது.

உடனே, சரோஜனி தேவி 'லைட், லைட்' என்ற ஓர் ஆங்கிலப் பாடலை அபிநயத்துடன் பாட ஆரம் பித்தார். சமயத்திற்குப் பொருத்தமாயிருந்த அந்தப் பாடலைக் கேட்டு மக்கள் மகிழ்ச்சியடைந் தனர்.

∴ ∴ ∴

சரோஜனி தேவி ஒரு முறை சிறையிலிருந்து விடுதலை பெற்று அலகாபாத்துக்குச் சென்றார். அவர் போய்ச் சேருவதற்கு முன்பே, அவருடைய பெட்டிகளும் பிற பொருள்களும் அங்கு வந்து தயாராகக் காத்திருந்தன.

சரோஜனி எல்லாப் பெட்டிகளையும் பார்த்தார். "இவ்வளவு பெட்டிகள் எதற்கு? இந்தப் பெட்டி ஒன்றுமட்டும் இருந்தாலே போதும். மற்றவற்றை ஊருக்கே திருப்பி அனுப்பிவிடுங்கள்" என்று அங்கிருந்தவர்களிடம் கூறினார்.

உத்தரவுப்படியே பிற பெட்டிகள் திருப்பி அனுப்பப்பட்டன. நிறுத்தி வைக்கப்பட்ட பெட்டியில்தான் தம்முடைய உடைகள் இருக்கின்றன என்று சரோஜனி நினைத்திருந்தார். ஆனால், பெட்டியைத் திறந்ததும் அவர் ஏமாந்து போய் விட்டார்! அதில் சரோஜனி தேவியின் சேலையோ, ரவிக்கையோ இல்லை; சில பாத்திரங்களே இருந்தன.

அதுகண்டு சரோஜனி வருந்தவில்லை. பெட்டியிலிருந்த 'டீ செட்' டைக் கையிலே எடுத்தார். அதை உற்றுப் பார்த்துக்கொண்டே, "ஐயோ, என் 'டீ செட்'டே! உன்னை நான் எப்படி உடுத்துவேன்!" என்று சிறு பிள்ளைபோல் குதித்துக் கொண்டே கூறினார்!





# சொந்தக் கையிலே சூடு போட்டுக் கொண்டவர்!

அவனோ மிகவும் சிறிய பையன். அவன் கையி லிருந்த சிலந்தியோ மிகவும் பெரிதாயிருந்தது. ஏதேதோ மருந்துகள் போட்டுப் பார்த்தார்கள்; யார் யாரோ வைத்தியம் செய்து பார்த்தார்கள். சிலந்தி அமுங்கவுமில்லை; பழுத்து உடையவு மில்லை.

சிலந்தி அப்படியே இருந்தாலும் குறைவில்லை. நாளுக்குநாள் அது பருத்துக்கொண்டே வந்தது. வலியும் அதிகரித்தது. 'விண், விண்' என்று

தெறித்தது. பாவம், அந்தப் பையனால் வலியைப் பொறுக்க முடியவில்லை.

அவன் தைரியமான பையன்தான். ஆனாலும், பல்லைக் கடித்துக்கொண்டு எத்தனை நாளைக்குத் தான் இருக்க முடியும்? ஓடி ஆடி விளையாட முடியவில்லை; இரவில் கொஞ்ச நேரம்கூடத் தூங்க முடியவில்லை. எந்த நேரமும் வலி இருந்து கொண்டேயிருந்தது.

ஒருநாள், அந்த வீதியில் இருந்த பெரியவர் ஒருவர் அந்தப் பையன் வீட்டுக்கு வந்தார். அவர் பையன் படும் துன்பத்தைக் கண்டார். "சூடு போட்டால், இது குணமாகி விடும்" என்று அவர் கூறினார்.

உடனே அப்பையன், அம்மாவைப் பார்த்து "அம்மா, தினந்தோறும் என்னால் இப்படித் துன்பப்பட முடியாது. சூடு போட்டால் குணமாகிவிடும் என்கிறார்களே, சூடு போடம்மா" என்று கெஞ்சினான்.

"ஐயையோ! சூடுபோட்டால் சுகமாகவா இருக்கும்? அப்போது என்ன வலி வலிக்கும்! வேண்டாம் கண்ணே, வேறு ஏதாவது மருந்து போடலாம்" என்றாள் அம்மா.

"போம்மா, நீதான் எத்தனையோ மருந்துகள் போட்டுப் பார்த்துவிட்டாயே! இதற்குச் சூடுதான் போடவேண்டும். சூடு போடும்போது எவ்வளவு வலி இருந்தாலும் பரவாயில்லை. பிறகு, சுகமாக இருக்குமல்லவா?" என்று பிடிவாதமாகக் கூறினான்.

அம்மா இணங்கவில்லை. "சரி, அம்மாவிடம் சொன்னால் இப்படித்தான் யோசிப்பாள். நாமே இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று எண்ணினான், அவன்.

நேராக அந்த ஊரிலிருந்த ஒரு மருத்துவரிடம் சென்றான். அவரிடம் தன் துன்பத்தை எடுத்துரைத்துச் சூடு போடும்படி வேண்டினான்.

மருத்துவர் இரும்புக் கம்பி ஒன்றை எடுத்து நெருப்பிலே வைத்தார். அது நன்றாகக் காய்ந்தது. கறுப்புக் கம்பி சூடு ஏறிச் சிவப்புக் கம்பியாக மாறியது. அதைக் கையில் எடுத்தார் மருத்துவர்; பையனின் கைக்கு அருகில் கொண்டு போனார்.

அப்போது அவர் கைகள் நடுநடுங்கின. "இவனோ சிறு பையன்; சூடு போட்டால் தாங்குவானா? துடிதுடித்து அலறுவானே!" என்று நினைத்தார். உடனே, அவர் தயங்கினார். பிறகு என்ன நினைத்தாரோ, காய வைத்த கம்பியைப் பேசாமல் கீழே போட்டுவிட்டார்.

இது அந்தப் பையனுக்கு ஏமாற்றமாக இருந்தது. உடனே அவன் அந்த மருத்துவரை எதுவுமே கேட்காமல், 'சட்'டென்று கீழே குனிந்தான். 'தக தக' என்று ஒளி வீசிக்கொண்டு கிடந்த கம்பியை எடுத்தான். எடுத்துத் தன் கையிலிருந்த சிலந்தியில் வைத்து அழுத்தினான்! உடனே, 'சடசட' என்ற சத்தம் வந்தது. சிலந்தியிலிருந்த கெட்ட நாற்றமும் வெளியேறியது.

பக்கத்திலிருந்தவர்கள் எல்லோரும், "ஐயையோ!" என்று அலறினர். ஆனால், அந்தப் பையனோ

சிறிதும் அசையவில்லை; 'ஆய்! ஊய்! என்று அலறவுமில்லை; 'உஸ்' என்றுகூடச் சத்தம் போட வில்லை!

அவனுடைய தைரியத்தையும், பொறுமை யையும் கண்டு அங்கிருந்தோர் வியந்தனர். ஆனால், இரும்புக் கம்பியால் சூடு போட்டுக்கொண்ட அதே பையன் ஒரு காலத்தில் அஞ்சா நெஞ்சம் படைத்த 'இரும்பு மனித'ராகவும், இடையூறுகள் எத்தனை வந்தாலும் எடுத்த காரியத்தை விடாது முடிக்கும் ஒரு வெற்றி வீரராகவும் திகழ்வான் என்று அப்போது அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்!

இப்போது அந்தப் பையன் யார் என்பது உங்க ளுக்குத் தெரிந்திருக்கும். **சர்தார் வல்லபாய் படேல்தான்** அந்தப் பையன்!

∴ ∴ ∴ ∴

படேல் அப்போது நாடியட் என்ற நகரத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் படித்துவந்தார். அவரு டைய வகுப்பு ஆசிரியர் படிப்புச் சொல்லிக்கொடுப் பதுடன் நோட்டுப் புத்தகம், பென்சில், முதலிய வற்றையும் பையன்களிடம் விற்று வந்தார்.

சம்பளம் போதாததால் இப்படி வியாபாரம் செய் தாவது குடும்பத்தை நடத்தலாம் என்று அவர் நினைத்தார் போலும். இதில் தவறில்லை. ஆனால், அவர் மாணவர்களிடம், "பையன்களா, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில்தான் நோட்டுப் புத்தகம், பென்சில் முதலியவற்றை வாங்க வேண்டும். வேறிடத்தில் வாங்கக்கூடாது" என்று உத்தரவும் போட்டுவிட்டார்!

ஒருநாள் படேல் கடை வீதியில் ஒரு நோட்டுப் புத்தகத்தை விலை கொடுத்து வாங்கிக்கொண்டு பள்ளிக்கூடத்திற்கு வந்தார். அவர் வைத்திருந்த நோட்டை ஆசிரியர் பார்த்துவிட்டார். அதைப் பார்த்ததும் அது எங்கோ ஒரு கடையில் வாங்கப் பட்டிருக்கிறது என்பதை அவர் அறிந்துகொண்டார். உடனே அவர் படேலின் அருகிலே வந்தார். நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தார். பிறகு, "அடே, நீ இதை எங்கே வாங்கினாய்?" என்று கோபமாய்க் கேட்டார்.

"கடையிலே வாங்கினேன், ஐயா" என்று அமைதியாகப் பதிலளித்தார் படேல்.

"ஏன் கடையில் வாங்கினாய்? என்னிடத்தில்தான் வாங்கவேண்டும் என்று கூறியிருக்கிறேனல்லவா? நீ சட்டத்தை மீறலாமா?"

"சட்டமா! அது என்ன?"

"நான் உன் ஆசிரியர். என்னை எதிர்த்தா பேசுகிறாய்?"

"நீங்கள் எங்கள் ஆசிரியர்தான். சந்தேகமில்லை. ஆனால், நாங்கள் உங்களிடம் பாடம் படிக்கத் தான் வருகிறோம்; வியாபாரம் செய்ய வரவில்லை"

"அடே, அதிகப் பிரசங்கி! போதும். நிறுத்து. இன்னொரு தடவை இப்படிச் செய்தால், உடனே உன்னைப் பள்ளிக்கூடத்தை விட்டுத் துரத்தி விடுவேன்"

"அவ்வளவு சிரமம் உங்களுக்கு வேண்டாம், ஐயா. நாளையிலிருந்து நானே இங்கு வருவதை

நிறுத்திக் கொள்கிறேன்" என்று தலைநிமிர்ந்து கூறினார், படேல்.

ஆசிரியர் அசந்து போய்விட்டார்! பேசாமல் இடத்தில் போய் உட்கார்ந்தார்.

மறுநாள், படேல் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை. அவர் மட்டும் வராதிருந்தால் அந்த ஆசிரியர் கவலைப்பட்டிருக்கமாட்டார். ஆனால், அந்த வகுப்புப் பிள்ளைகளில் ஒருவர்கூட வர வில்லை! ஆம், எல்லோரும் படேல் செய்ததே நியாயம் என்று கருதி அவர் பக்கம் சேர்ந்து விட்டனர்.

இறுதியில், அந்த நகரிலுள்ள ஒரு பெரியவர் இந்த வழக்கில் தலையிடவேண்டி வந்தது. படேலை யும், அந்த ஆசிரியரையும் அவர் சமாதானப் படுத்திவைத்தார்.

∴ ∴ ∴

ஓர் ஆசிரியர் வீடு. அந்த வீட்டில் படேலும், அவருடன் சில சிறுவர்களும் தங்கியிருந்து படித்துவந்தனர். அவர்கள் படிப்பது,சாப்பிடுவது, தூங்குவது எல்லாம் அங்கேதான். மொத்தத்தில் அது ஒரு சிறு குருகுலம் போலவே விளங்கி வந்தது.

படிப்பைப் பற்றிய செய்திகளை ஆசிரியர் கவனித்து வந்தார். சாப்பாடு பற்றிய விஷயங்களை அவருடைய மனைவி கவனித்து வந்தாள்.

எல்லோருக்கும் இரவில் தூங்கப் போவதற்கு முன்னால் பால் கொடுப்பது வழக்கம். ஆசிரியரின்

மனைவி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குவளை நிறையப் பால் கொண்டுவந்து கொடுப்பாள்.

அன்று ஒவ்வொருவருக்கும் கொடுத்துக்கொண்டே வந்தாள். இறுதியாகப் படேலுக்குக் கொடுக்க மட்டும் பால் இல்லை. என்ன காரணத்தாலோ, அன்று பால் குறைந்துவிட்டது. வேறு வழியில்லாததால் அவள் பேசாமல் இருந்துவிட்டாள்.

படேல் பால் சாப்பிடவில்லை என்பதை ஆசிரியர் தெரிந்துகொண்டு விட்டார். உடனே அவர் தம் மனைவியைப் பார்த்து, "படேலுக்கு ஏன் பால் கொடுக்கவில்லை?" என்று கேட்டார்.

"பால் என்றால் படேலுக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை" என்று ஏதோ ஒரு சாக்குச் சொல்லிவைத் தாள் அந்த அம்மாள்.

படேல் அவள் கூறியதைக் கேட்டுக்கொண்டுதான் படுத்திருந்தார். அப்போது அவர் தூங்கவில்லை!

மறுநாள், ஆசிரியரின் மனைவி முன்போல் பால் கொண்டுவந்து கொடுத்ததும், "வேண்டாம். எனக்குப் பால் பிடிக்காது!" என்று கூறிவிட்டார் படேல்.

அந்த அம்மாள் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள்; கொஞ்சிப் பார்த்தாள். ஊஹூம்...ஒன்றும் பலிக்கவில்லை!

அன்றிலிருந்து படேல் அந்த ஆசிரியர் வீட்டில் தங்கியிருக்கும்வரை ஒரு தடவைகூடப்பால் அருந்தவில்லை! அவருடைய பிடிவாதத்தைக் கண்டு அந்த அம்மாளே ஆச்சரியப்பட்டாள்!

∴ ∴ ∴

1917-ஆம் ஆண்டு ஆமதாபாத் நகரில் பல இடங்களில் கொடிய பிளேக் நோய் பரவியது. பிளேக் நோய் என்ருல் யார்தான் பயப்படாமல் இருக்க முடியும்? வசதியுள்ளவர்கள் நகரைவிட்டு வெளியூருக்கு ஓடிவிட்டனர். கோர்ட்டுகள், சர்க்கார் ஆபீஸ்கள் மூடப்பட்டன.

அப்போது, படேல் நகர சுகாதாரக் குழுவின் தலைவராயிருந்தார். அவர் பிளேக் நோயை ஒழிக்கத் தீவிரமாகப் பாடுபட்டார். காலையிலும் மாலையிலும் சுகாதார அதிகாரிகளுடன் புறப்பட்டு ஒவ்வொரு வீடாகச் செல்வார்.

வீடு வீடாகச் செல்லும்போது ஓர் ஏழைக் குடும்பத்தைப் பார்க்க நேர்ந்தது. அக் குடும்பத்தில் இருந்த அனைவரிடமும் பிளேக் நோய் உண்டாவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. அப்போதே தக்க மருந்து கொடுத்தால், நோய் வராமல் தடுத்துவிடலாம் என்று படேல் நினைத்தார். நினைத்தபடி காலையிலும், மாலையிலும் தாமே நேராகச் சென்று அக்குடும்பத்தாருக்கு மருந்து கொடுத்துவந்தார். துர் அதிர்ஷ்டவசமாக ஒரே ஒருவர்மட்டும் அக்குடும்பத்தில் இறந்துவிட்டார். மற்றவர்கள் படேலின் தீவிர முயற்சியால் உயிர் தப்பினர்.

"இவ்வளவு தைரியமாக அவர் பிளேக் இருந்த இடங்களுக்குச் சென்ருரே, அது தொத்து நோயல்லவா? அவரையும் பிடித்துக்கொள்ளாதா?" என்று தானே கேட்கிறீர்கள்?

ஆம், ஆம், அது தொத்து நோய்தான். படேலையும் அது சும்மாவிடவில்லை. அவருக்கும் பிளேக் நோய் கண்டுவிட்டது!

“ஐயோ! ஊருக்கு உழைக்கப் போய்த் தம் உயிருக்கே ஆபத்தைத் தேடிக்கொண்டு விட்டாரே!” என்று பலரும் நினைத்து வருந்தினர். ஆனால், கடவுள் அருளால் அப்போது நம் படேல் உயிர் பிழைத்துவிட்டார் என்று, நான் சொல்லாமலே நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள்!

∴ ∴ ∴

படேல் பாரிஸ்டராக இருந்து தொழில் நடத்தும் போது அவருக்கு நல்ல வருமானம் வந்தது. வாதாடுவதிலும், சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதிலும் அவர் மிகவும் கெட்டிக்காரர் என்று கூறுவார்கள்.

ஒரு சமயம் மடாதிபதி ஒருவர், யாரோ ஒருவரைக் கொலை செய்துவிட்டதாக ஒரு வழக்கு வந்தது. அந்த வழக்கில் மடாதிபதிக்காகப் படேல் ஆஜரானார். வெள்ளைக்காரர் ஒருவர் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்து வழக்கை நடத்தினார்.

மடாதிபதி நிரபராதி என்றும், ‘போலீஸார்’ வேண்டுமென்றே அந்த வழக்கை கற்பனை செய்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்றும் படேல் அறிந்து கொண்டார். மடாதிபதியைக் காப்பாற்ற வேண்டியது தம் கடமை என்று கருதினார்.

போலீஸார் எட்டு சாட்சிகளைக் கொண்டு வந்தனர். ஏழு சாட்சிகளும் போலீஸார் சொல்லிக் கொடுத்தபடி ஒப்புவித்தனர். எட்டாவது சாட்சி ஒரு மணியக்காரர். அவர் கொலை நடந்ததைப் பார்த்ததாகக் கூறும்போது படேல் கவனமாகக் கேட்டார். போலீஸார் அவருக்கு மட்டும் சரியாகப் பாடம் சொல்லிக் கொடுக்கவில்லை என்பதை ஊகித்து அறிந்தார். உடனே, திடீரென்று அவரைக் குறுக்குக் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்.

அந்த மணியக்காரர் முன்னுக்குப்பின் முரணுக உளறுவதைக் கண்டதும், போலீஸார் பயந்து போயினர். வெள்ளைக்கார மாஜிஸ்ட்ரேட்டும் போலீஸாருக்குச் சாதகம் செய்ய நினைத்தார். உடனே, "நீர் முதலில் வந்த ஏழு சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவில்லை. இவரை மட்டும் விசாரணை செய்கிறீரே, ஏன்?" என்று கோபமாய்க் கேட்டார்.

உடனே படேல், "அது என் விருப்பம்" என்றுர்.

இதைக் கேட்ட மாஜிஸ்ட்ரேட், "என்ன, உமது விருப்பமா?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"சந்தேகமென்ன? இதை வழக்கு மன்றம் மறுக்க முடியாது. இங்கு நடப்பது வழக்கே அல்ல; வெறும் நாடகம். போலீஸாரே இந்த நாடகத்தைத் தயாரித்திருக்கிறுர்கள். மடாதிபதியை உடனே விடுதலை செய்ய வேண்டும். பொய் கூறிய சாட்சிகளை உடனே கைது செய்ய வேண்டும். இல்லாவிடில் நான் விடப்போவதில்லை. மேல்கோர்ட்டிலே இதே வழக்கை நடத்தி உண்மையை அம்பலப் படுத்துவேன். அப்போது தாங்களும் அங்கு வந்து நிற்கவேண்டியிருக்கும்" என்று அடித்துப் பேசினுர் படேல்.

இதைக் கேட்ட மாஜிஸ்ட்ரேட்டும் போலீஸாரும் பதைபதைத்துப் போயினர். முடிவு?

அன்றே மடாதிபதிக்கு விடுதலை கிடைத்தது!





# பெயர் தெரியாத கவிஞர்!

அது ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடம். அங்கே படித்துக் கொண்டிருந்தான், ஒரு மாணவன். அவனுக்குத் தமிழிலே ஆர்வம் அதிகம். அவனுக்குப் பாட்டு இயற்றவும் நன்ருகத் தெரியும். ஆனுலும், தனக்குப் பாட்டு எழுதத்தெரியும் என்பதை அவன் வெளியில் காட்டிக்கொள்வதில்லே.

ஒரு நாள், அந்த மாணவன் மனத்திலே ஒரு பாட்டுத் தோன்றியது. அதை ஒரு காகிதத்தில் எழுதினுன்; படித்துப் பார்த்தான். படிக்கப் படிக்க

அது மிகவும் நயமாக அமைந்திருப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது.

'இந்தப் பாட்டை நாம் யாரிடமாவது காட்ட வேண்டும். அவர்களுடைய கருத்தை அறிய வேண்டும்' என்று நினைத்தான்.

ஆனால், பிறரிடத்தில் காட்டுவதற்கு அவனுக்குக் கூச்சம்; காட்டாமல் இருக்கவும் மனமில்லை.

சிறிதுநேரம் சிந்தித்தான்; இறுதியில், ஒரு முடிவுக்கு வந்தான்.

அதன்படி, மறுநாள் மிகவும் சீக்கிரமாக - அதாவது எல்லோருக்கும் முன்பாகப் பள்ளிக்குச் சென்றான்; தான் இயற்றிய பாட்டை ஒரு தாளில் எழுதினான்; ஆசிரியர் உட்காரும் இடத்திற்கு அருகில் வைத்துவிட்டுத் தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டான்.

சிறிதுநேரம் சென்று மற்றொரு மாணவன் அங்கு வந்தான். அவன் தரையில் காகிதத்தில் ஏதோ எழுதிக் கிடப்பதைக் கண்டான். உடனே அதை எடுத்தான்; படித்தான்; பிறகு, தமிழாசிரியரிடம் அதைக் கொண்டு போய்க் கொடுத்தான்.

தமிழாசிரியர் பாட்டைப் படித்துப் பார்த்தார். "அடடா! இந்தப் பாடல் எவ்வளவு அழகாயிருக்கிறது! இதை இயற்றிய கவிஞர் யார்? பெயர் போடவில்லையே!" என்று சொல்லிவிட்டுத் திரும்பத் திரும்ப அதைப் பாடி மகிழ்ந்தார்; மாணவர்களுக்கும் அதைப் பாடிக் காட்டினார்; பாட்டில் உள்ள சொல் அழகையும் பொருள் அழகையும் எடுத்துக் கூறினார்.

மாணவர்கள் யாவரும் அந்தப் பாடலின் பெருமையை உணர்ந்தனர். 'இதை இயற்றிய கவிஞர் யாராயிருக்கும்?'' என்று அவர்களும் சிந்தித்தனர்.

ஆனால், அதை இயற்றிய கவிஞர் அதே வகுப்பில் அவர்களுக்கு மத்தியிலேயே உட்கார்ந்திருக்கிறார் என்பதை அவர்கள் அப்போது அறியவில்லை!

இப்படி ஒரு காலத்தில் பெயர் தெரியாத கவிஞனாயிருந்தான் அந்த மாணவன். இப்போது, தமிழ் தெரிந்த ஒவ்வொருவருக்கும் தெரிந்த பெரிய கவிஞராக விளங்குகின்றான்! **கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை** என்றால் இப்போது யாருக்குத்தான் தெரியாது!

ஃ ஃ ஃ

கவிமணி சிறு பிள்ளையா யிருக்கும்போது, ஒரு மடத்திலுள்ள தம்பிரானிடம் தமிழ் கற்று வந்தார். அவருடன், அவர் வயதுச் சிறுவர்கள் சிலரும் படித்து வந்தார்கள்.

அன்று வழக்கம்போல் கவிமணியும், அவர் நண்பர்களும் மடத்துக்கு வந்தனர். அப்போது, அங்கே அப்பமும், வடையும் ஏராளமாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தன. முதல் நாள் சிவராத்திரியாதலால் கோவிலிலிருந்து மடத்திற்கு அவை வந்திருந்தன.

கவிமணியையும், மற்றவர்களையும் தம்பிரான் அருகிலே அழைத்தார். "இப்போது நான் இந்த அப்பம், வடை முதலியவற்றை உங்களுக்குத் தரப் போகிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. இதோ என் கையில் தேவாரத் திரட்டு இருக்கிறது. இதி

லிருந்து முதலில் நான் ஒரு பாடலைப் பாடுவேன்; பிறகு உங்களிடம் புத்தகத்தைத் தருவேன்... நீங்கள் புத்தகத்தைப் பார்த்து அதே பாடலை ஒரு முறை படியுங்கள். பிறகு, நான் புத்தகத்தைத் திரும்ப வாங்கி மற்ருெரு முறை அதே பாட்டைப் பாடுவேன். அப்புறம் நீங்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமா? அந்தப் பாடலைத் தவறு இல்லாமல் மனப்பாடமாக ஒப்புவிக்க வேண்டும். சரியாகச் சொல்லுகிறவர்களுக்குப் பாட்டு ஒன்றுக்கு ஓர் அப்பம் அல்லது ஒரு வடை வீதம் தருவேன். எங்கே, பார்க்கலாம்!" என்று சொன்ஞர்.

எல்லோரும், 'சரி' என்று கூறித் தலையை ஆட்டினர்.

போட்டி ஆரம்பமாயிற்று. அப்பமும், வடையும் ஒவ்வொன்ருகக் கவிமணி அவர்களிடம் சரணடைந்தன. கொஞ்ச நேரத்தில் மொத்தம் இருந்த அப்பம் வடைகளில் முக்கால் பங்குக்கு மேல் கவிமணியிடம் வந்து சேர்ந்துவிட்டன!

ஆனல், கவிமணி போட்டியில் பரிசாகக் கிடைத்த அந்த வடைகளையும், அப்பங்களையும் தாமாகத் தின்றுவிடவில்லை! எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்துத் தாமும் அவர்களுடன் சேர்ந்து உண்டு மகிழ்ந்தார்.

ஃ ஃ ஃ

கவிமணி வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒருநண்பர் இருந்தார். அவருடைய குடும்பத்தில் ஒருவிழா நடை பெறவேண்டியிருந்தது. விழாவிற்கு உறவினர்களும், நண்பர்களும் ஏராளமாக வருவார்கள்.

அவ்வளவு பேரும் தங்குவதற்கு அவருடைய வீடு போதாது. ஆகையால், 'விழாவை நடத்துவதற்குத் தங்கள் வீட்டைத் தந்துதவ வேண்டு'மெனக் கவிமணியை அவர் கேட்டார். கவிமணியும் அதற்கு இசைந்தார்.

அன்று கவிமணி வீட்டில் ஏராளமான கூட்டம். விருந்து நடப்பதற்கு இன்னும் சிறிது நேரமே இருந்தது.

அப்போது வெளியிலிருந்து ஓர் ஆள் வீட்டுக்குள் ஓடிவந்தான். கவிமணியை நெருங்கி அவர் காதுக்குள், ''உங்கள் பெயருக்கு ஒரு தந்தி வந்திருக்கின்றது!'' என்று மெதுவாகச் சொன்னான்.

உடனே, கவிமணி எதுவும் கூறுமல் மெதுவாக எழுந்து வந்தார். வாசலில் நின்ற தந்திச் சேவகனை அழைத்துக்கொண்டு வெளியில் சென்ருர். அவனிடமிருந்த தந்தியைக் கையிலே வாங்கினுர். ஆனுல், உடனே அதை அவர் பிரித்துப் பார்க்கவில்லை. பேசாமல், தம்முடைய சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு உள்ளே போய்விட்டார்.

இந்தக் காலத்தில் நாம் எடுத்ததற்கெல்லாம் தந்தி கொடுக்கிருேம். பிறந்த நாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, பரீட்சையில் வெற்றி பெற்றதற்கு வாழ்த்து—இப்படி எத்தனையோ விதமான வாழ்த்துத் தந்திகள் அனுப்புகிருேம். ஆனுல், அந்தக் காலத்தில் ஏதேனும் துன்பமான செய்தியாக இருந்தால்தான் தந்தி வருவது வழக்கம். ஆகையால் 'தந்தி' என்றுலே எல்லோருக்கும் பயம்தான்!

அப்படி யிருக்கும்போது, தந்தியை வாங்கியதும் உடனே பரபரப்புடன் பிரித்துப் பார்த்திருக்க வேண்டாமோ? பார்க்கவில்லை, நமது கவிமணி. ஏன்?

'இதில் ஏதேனும் துன்பச் செய்தி இருக்கலாம். அது எப்படிப்பட்டதாக இருக்குமோ? அதைப் படித்ததும், நிச்சயம் நமக்குக் கலக்கம் ஏற்படும். மற்றவர்களும் செய்தியை அறிந்துகொண்டுவிடு வார்கள். மகிழ்ச்சியோடு எல்லோரும் சாப்பிடப் போகிறார்கள். இப்போது இந்தத் தந்தியை வெளி யிட்டால் எல்லோரும் வருந்துவார்கள். விழாவும் அமங்கலமாக முடியும்' என்று எண்ணியே தந்தி யைப் பிரித்துப் பார்க்காமல் வைத்திருந்தார்.

'தந்தியில் என்ன இருக்குமோ! ஏது இருக் குமோ!' என்று உள்ளூர அவர் கவலைப்பட்டுக் கொண்டுதான் இருந்தார். ஆயினும், வெளியில் காட்டிக்கொள்ளவில்லை.

மாலை நேரம் விழா முடிந்து எல்லோரும் அவ ரவர் வீடு சென்றனர். எல்லோரும் சென்ற பிறகு, கவிமணி அந்தத் தந்தியை எடுத்துப் பிரித்துப் படித்துப் பார்த்தார்; உடனே திடுக்கிட்டார்; கண் கலங்கினார்.

'தங்கள் மருமகள் இறந்துவிட்டாள். உடனே புறப்பட்டு வரவேண்டும்' என்று அந்தத் தந்தியில் இருந்தது!

உடனே அங்கிருந்து புறப்பட்டு விட்டார், கவி மணி. அந்த அவசரத்தில் மனைவியிடம்கூட அவர் செய்தியைச் சொல்லவில்லை!

'கிளிக்கு ஒரு காலில் எத்தனை விரல்கள் ?' என்று கேட்டால், பலர் 'ஐந்து' என்று தயங்காமல் கூறுவார்கள்.

ஆனால், நம்மைப்போல் அதற்கு ஐந்து விரல்கள் இருப்பதில்லை. நான்கே நான்கு விரல்கள்தாம் உண்டு.

இந்த நான்கு விரல்களில், 'முன்னால் இருக்கும் விரல்கள் எத்தனை? பின்னால் இருக்கும் விரல்கள் எத்தனை ?' என்று ஒரு கேள்வியை ஒரு சமயம் கவி மணி சில இளைஞர்களைப் பார்த்துக் கேட்டார். அப்போது அவர் ஓர் ஆரம்பப் பள்ளியில் ஆசிரிய ராக இருந்தார்.

பாடப் புத்தகத்தில் கிளியைப் பற்றி ஒரு பாடம் இருந்தது. அதில் கிளியின் படமும் வரையப்பட் டிருந்தது. அந்தக் கிளியின் படத்தைப் பார்த்த பிறகுதான் கவிமணி இந்தக் கேள்வியைக் கேட்டார்.

இளைஞர்கள் புத்தகத்தைப் பார்த்துக் கூற முயன்றனர். ஆனால், கவிமணி 'புத்தகத்தை எல் லோரும் மூடி வைத்துவிடவேண்டும்' என்று முன்பே அறிவித்துவிட்டார்.


எல்லோரும் அவ்வாறே புத்தகத்தை மூடி வைத்துவிட்டனர். சிலர், 'கிளிக்கு முன்னால் மூன்று விரல்களும், பின்னால் ஒரு விரலும் இருக் கின்றன' என்றனர். மற்றவர்களும் அதை ஆமோதித்தனர்.


உடனே கவிமணி, புத்தகத்தைத் திறந்து கிளி யின் படத்தைப் பார்க்கச் சொன்னார். பார்த்ததும்,

''நாங்கள் கூறியதுதான் சரி. படத்திலும் அப்படித்தான் இருக்கிறது. முன்னுல் மூன்று விரல்கள்; பின்னுல் ஒரு விரல்!'' என்று ஆனந்தக் கூச்சலிட்டனர், இளைஞர்கள்.

ஆனுல் கவிமணி, ''நீங்கள் சொன்னதும் தவறு; இந்தப் படத்தில் இருப்பதும் தவறு. கிளிக்கு முன்னுல் இரண்டு விரல்களும் பின்னுல் இரண்டு விரல்களுமே உண்டு'' என்றுர்!

அதை அப்போது சிலர் நம்பவில்லை. ஆனுல், கிளியை நேரில் பார்த்த பிறகுதான், ''ஆமாம், கவிமணி கூறியது சரிதான்' என்று அவர்கள் ஒப்புக் கொண்டனர்.






# சரியான விடைக்குத் தண்டனை பெற்றவர்!

**ம**ணி அடித்தது. பூகோள ஆசிரியர் வகுப்புக்குள் நுழைந்தார். அவரைக் கண்டதும் மாணவர்கள் எல்லோரும் மரியாதையாக எழுந்து நின்றனர். 'மரியாதையாக எழுந்து நின்றனர்' என்று கூறுவதைவிட 'நடுநடுங்கிக் கொண்டே எழுந்து நின்றனர்' என்று கூறினால் மிகவும் பொருத்தமாக இருக்கும். ஆம், அந்த ஆசிரியர் அவ்வளவு பொல்லாதவர்! அவருக்குக் கோபம் வந்துவிட்டால், மாட்டை அடிப்பது போல் மாணவர்களை அடித்துவிடுவார்!

அவர் வகுப்பிலே வந்து உட்கார்ந்ததும், கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டார்.

"அடே நரேந்திரா, எழுந்திரு" என்று கூறி விட்டு, முதல் நாள் நடந்த பூகோளப் பாடத்தில் ஒரு கேள்வி கேட்டார்.

நரேந்திரன் உடனே எழுந்தான். கேட்ட கேள் விக்குச் சிறிதும் தயக்கமில்லாமல் விடை அளித் தான்.

அவன் கூறிய பதிலைக் கேட்டதும் ஆசிரியர், "அடே, என்னடா தப்பாக உளறுகிறுய் ?" என்று மிரட்டினுர்.

"இல்லை ஐயா, சரியாகத்தான் சொல்லுகிறேன்"

"என்ன! சரியாகத்தான் சொல்லுகிருயா ? அப் படியானுல், என்னை முட்டாள் என்கிருயா ?"

"இல்லை ஐயா. நான் சொன்ன விடை சரியானது தான்"

"தவருன விடையைக் கூறிவிட்டு எதிர்த்து வேரு பேசுகிருய் ? மடையா" என்று கோபமாய்க் கூறிக்கொண்டே அவர் எழுந்து வந்தார். பிரம்பினுல் நரேந்திரனை அடிக்க ஆரம்பித்து விட்டார்.

அவர் என்னதான் அடித்தாலும் நரேந்திரன், தான் சொல்வதே சரி என்று அழுத்தந் திருத்த மாகக் கூறினுன். திரும்பத் திரும்பச் சொன்ன தையே அவன் சொல்லி வந்ததால் அவருடைய கோபம் அதிகமாகிவிட்டது. கோபம் அதிகமாகி விட்டால்தான் தலைகால் தெரியாதே! ஆத்திரத்தில் அவர் நரேந்திரனை அடி அடியென்று நன்ருக அடித்துவிட்டார்.

கடைசியில் கை ஓய்ந்த பிறகே அவர் இடத்தில் போய் உட்கார்ந்தார். சிறிது நேரம் சென்றது. அவரது கோபம் அடங்கியது. நிதானமாக யோசித்தார். நரேந்திரன் கூறிய விடை சரிதான் என்பது அப்போதுதான் அவருக்குப் புரிந்தது. தம் தவற்றை உணர்ந்தார். உடனே, எழுந்து நரேந்திரனிடம் வந்தார். "நரேந்திரா, உன்னை நான் தவருக அடித்துவிட்டேன். நீ சொன்னதுதான் சரி. என்னை மன்னித்துவிடு" என்று வருத்தத்துடன் கூறினார்.

வகுப்பிலிருந்த மற்ற மாணவர்கள் எல்லோரும் இக்காட்சியைக் கண்டு வியந்தனர். அந்த உபாத்தியாயரும் அன்று முதல் தம்முடைய 'பிரம்படி வேலை' யை நிறுத்திக் கொண்டார்.

சரியான விடையளித்தும் தண்டனை பெற்றானே அந்த மாணவன்—அந்த நரேந்திரன் பிற்காலத்தில், டாக்டர் நரேந்திரனுகவோ வக்கீல் நரேந்திரனுகவோ, என்ஜினீயர் நரேந்திரனுகவோ, முதலாளி நரேந்திரனுகவோ வரவில்லை. உலகமே போற்றும் ஒரு சிறந்த வேதாந்தியாக—இந்து மதத்தின் உயர்ந்த கொள்கைகளை உலகுக்கு எடுத்துக் காட்டி வியக்கச் செய்த ஒரு பெரிய மகானுக விளங்கலானுன்! அந்த மாணவன் பிற்காலத்தில் ஒரு மகானுக விளங்கியது போலவே, நரேந்திரன் என்ற அவனுடைய பெயரும் பிற்காலத்தில் **சுவாமி விவேகானந்தர்** என்று விளங்கலாயிற்று!

ஃ ஃ

விவேகானந்தரின் அப்பா ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞர். அவரிடம் தினந்தோறும் பல கட்சிக்காரர்கள் வருவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும்

வெவ்வேறு விதமாக நடத்தப்படுவார்கள். சிலர், வந்ததும் அங்கிருக்கும் ஆடம்பரமான நாற்காலியில் உட்காருவார்கள். சிலர் தரையிலே உட்காருவார்கள். சிலர் கால் கடுக்க அப்பாவின் முன் நின்றுகொண்டே பேசுவார்கள். சிலர் வீட்டுக்குள் வராமல் வெளியிலேயே கைகட்டி நிற்பார்கள்.

'ஏன் இந்த வேற்றுமையெல்லாம்?' என்று சிறு பையனான விவேகானந்தருக்குப் புரியவில்லை.

'இவர் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர். அவன் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவன். அவனைத் தொடக் கூடாது' என்று ஒரு சமயம் அவரிடம் ஒருவர் கூறினார்.

"ஏன், தொட்டால் என்ன? குடி முழுகிப்போய் விடுமா? அல்லது, செத்துப்போய் விடுவோமா? நான் இப்படிப்பட்ட எத்தனையோ பேர்களைத் தொட்டிருக்கிறேனே! அவர்கள் கொடுத்த தின்பண்டங்களையும் வாங்கித் தின்றிருக்கிறேனே! நான் செத்தா போய்விட்டேன்? இன்னும் உயிருடன்தானே இருக்கிறேன்!" என்று விவேகானந்தர் கூறிச் சிரித்தார்.

'ஜாதி வேற்றுமை கூடாது' என்று அந்தச் சிறு வயதிலேயே அவர் நினைத்தார். நினைத்ததைக் கடைசிவரை பேசிவந்தார்; எழுதியும் வந்தார்.

ஃ ஃ ஃ ஃ

விவேகானந்தர் மாணவராக இருக்கும்போதே அற்புதமாக வீணை வாசிப்பார்; அருமையாக மிருதங்கம் வாசிப்பார்; இனிமையான குரலில் இசையோடு பாடுவார். அவற்றுடன் சிலம்ப விளையாட்டிலும் தீரராக விளங்கினார்!

ஒரு சமயம் சிலம்ப வித்தையில் கெட்டிக்காரனை ஒருவன் வந்தான். அவன் வயதில் பெரியவன். பல இடங்களில் வெற்றிபெற்றவன். அவனை எதிர்த்து விளையாட விவேகானந்தர் முன் வந்தார்.

சிலருக்கு இது வியப்பாக இருந்தது. 'இவனோ சிறுபையன்! போதிய அனுபவமும் இல்லாதவன். இவன் அந்த முரடனுடன் சண்டைக்குப் போகிறானே!' என்று கூறி அவர்கள் வியந்தார்கள்.

பலர் கேலி செய்தனர். "ஆளைப் பார்த்தால் ஆழாக்குப் போல் இருக்கிறான். இவனாவது, அம்மல்லனுடன் சிலம்பம் விளையாடுவதாவது! எங்காவது கையைக் காலை ஒடித்துக் கொள்ளப் போகிறான்" என்று கூறி அவர்கள் கேலி செய்தனர். விவேகானந்தர் தயங்கவில்லை. வீரமாக அவனுடன் சிலம்பம் விளையாடினார். இருவரும் நெடுநேரம் வெகு மும்முரமாக விளையாடினார்கள்.

விவேகானந்தரின் ஆட்டத்தைப் பார்த்த எல்லோருமே ஆச்சரியப்பட்டார்கள். அவரது திறமையையும், நுட்பமதியையும் பாராட்டினார்கள். 'ஊம், விடாதே ! ......சபாஷ் ! ......' என்றெல்லாம் ஊக்க மூட்ட ஆரம்பித்தார்கள்.

கடைசியில் விவேகானந்தரே வெற்றி பெற்றார் ! சதாரணமாக வெற்றி பெறவில்லை; எதிரியின் சிலம்பத் தடியைச் சின்னா பின்னமாக உடைத்தெறிந்துச் வெற்றிபெற்றார் !

∴ ∴ ∴ ∴

விவேகானந்தர் சிறுவனாக இருந்தபோது அவருடைய நண்பன் ஒருவனின் வீட்டுக்கு அடிக்கடி

விளையாடச் செல்வார். நண்பன் வீட்டுத் தோட்டத்தில் ஒரு செண்பக மரம் இருந்தது. அதில் விவேகானந்தரும், அந்த நண்பனும் ஏறி விளையாடுவார்கள். விவேகானந்தர் அதன் உச்சியில் ஏறிக் கிளைகளில் கால்கள் இரண்டையும் மாட்டிக்கொண்டு தலை கீழாகத் தொங்குவார்; கிளைக்குத் கிளை தாவுவார்; மேலிருந்து கீழே குதிப்பார்; கீழிருந்து மேலே மள, மள என்று ஏறுவார். இப்படிப்பட்ட 'சர்க்கஸ்' வேலைகளில் அவருக்கு விருப்பம் அதிகம்.

மரத்தில் ஏறி இப்படிக் குறும்புகள் செய்வது அந்த வீட்டிலிருந்த ஒரு கிழவருக்குப் பிடிக்க வில்லை. அதனால் அவர், ஒருநாள் விவேகானந்தரிடமும், அவருடைய நண்பனிடமும் வந்து, "நீங்கள் அந்த மரத்தில் ஏறக்கூடாது. ஏறினால் ஆபத்துத்தான்! அந்த மரத்திலே ஒரு பிரம்ம ராட்சசன் இருக்கிறான். அவன் நள்ளிரவிலே வெள்ளை உடையுடன் இங்கு மங்கும் சுற்றித் திரிகிறான். யாராவது மரத்தில் ஏறினால், அவன் அவர்கள் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கைலாயத்துக்கு அனுப்பிடுவான். ஜாக்கிரதை!" என்று கட்டுக் கதை கட்டிப் பயமுறுத்திவிட்டுப் போனார்.

இந்தக் கதையைக் கேட்டதும் அவர்கள் பயந்து விடுவார்கள், அப்புறம் அந்த மரத்துப் பக்கமே தலைகாட்டமாட்டார்கள், என்பது அவர் நினைப்பு.

ஆனால், விவேகானந்தர் இந்த மிரட்டலுக்கெல்லாம் பயப்பட வில்லை. தைரியமாக மரத்தில் ஏறி விளையாடச் சென்றார். ஆனால், அவருடைய நண்பனோ மிகவும் பயந்தான். விவேகானந்தரையும் விளையாட வேண்டாமென்று கூறித் தடுத்தான்.

அப்போது விவேகானந்தர், "அட பயங் கொள்ளி! அந்த பிரம்ம ராட்சசன் என்னை என்ன தான் செய்கிறன் என்று பார்ப்போமே! இவ்வளவு நாட்களாக நாம் இங்கு விளையாடிக்கொண்டுதானே இருந்தோம். அந்தக் கிழவர் சொன்னது உண்மை யாக இருந்தால், நம் கழுத்தெல்லாம் எப்போதோ ஒடிந்து போயிருக்க வேண்டுமே!" என்று கூறி விட்டுச் சிரித்தார். சிரித்துக்கொண்டே மரத்தில் ஏறித் தலை கீழாகத் தொங்கி விளையாடலானுர்!

∴ ∴ ∴

ஆள்வார் சமஸ்தானத்தில் ஒரு திவான் இருந் தார். அவருக்குச் சுவாமி விவேகானந்தரிடம் அள வற்ற பக்தி. அவர் மாளிகைக்கு ஒரு முறை விவேகா னந்தர் எழுந்தருளி இருந்தார். அப்போது, அவரைக் காண ஆள்வார் மகாராஜா வந்தார். வந்தவர் விவேகானந்தருடன் பல செய்திகளைப் பற்றிப் பேசிக் கொண்டே இருந்தார்.

அப்போது அவர், "ஏன் சுவாமி, கல்லையும் மண்ணையும் வைத்துக் கடவுள் என்று மக்கள் வணங்குகிறர்களே! அது சரி என்று எனக்குத் தோன்றவில்லை. இப்படி நான் சொல்லுவதால் எனக்கு ஏதேனும் ஆபத்து ஏற்படுமோ?" என்று சிறிது கிண்டலாகக் கேட்டார்.

விவேகானந்தர் அதற்கு ஒன்றும் பதில் கூற வில்லை. சிறிது நேரம் சென்றது. விவேகானந்தர் அங்கே சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தைப் பார்த்தார். அது அந்த அரசரின் படம். உடனே, அதை எடுத்து வரும்படி திவானிடம் கூறினுர்.

திவான், படத்தை எடுத்து வந்தார். படத்தைக் கையில் வாங்கிய விவேகானந்தர், திவானையும், மற்றும் அங்கிருந்தவர்களையும் பார்த்து, "இதோ இருக்கிறதே படம், இதில் நீங்கள் காறித் துப்புங்கள்" என்றார்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் அவர்கள் திடுக்கிட்டார்கள். "என்ன சுவாமி, இது எங்கள் அரசரின் படமல்லவா ?" என்றனர்.

"இதில் கண்ணாடியும் காகிதமும்தானே இருக்கின்றன ! உங்கள் அரசரா இருக்கிறார் ?"

"அரசர் இதில் இல்லாவிட்டாலும் அரசரின் உருவம் இருக்கிறதல்லவா ?"

"ஆம், அரசரின் உருவம்தான் இதில் இருக்கிறது. இந்த உருவத்தின் மூலமாக நீங்கள் உங்கள் அரசருக்கு மரியாதை செலுத்துகிறீர்கள். அதே போலத்தான் நாங்களும் இந்த உலகத்தைப் படைத்த ஆண்டவனுக்கு ஓர் உருவத்தின் மூலமாக வணக்கம் செலுத்துகிறோம். இந்தப் படத்தைப் பார்த்து, 'கண்ணாடியே, காகிதமே' என்று நீங்கள் கூறுவதில்லை. அதே போல்தான் 'கல்லே, மண்ணே, தாமிரமே' என்று நாங்களும் கூறி வணங்குவதில்லை. கடவுளின் உருவங்களாகவே அவற்றைக் கருதி வணங்குகிறோம்" என்றார் விவேகானந்தர்.

இதைக் கேட்டதும் மன்னனின் மனம் மாறியது. விவேகானந்தரிடம் அவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

ஃ ஃ ஃ

ஒரு சமயம் விவேகானந்தர் ரயிலில் இரண்டாம் வகுப்பிலே பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

சாதாரணமாக அவர் மூன்றும் வகுப்பில்தான் செல்வார். ஆனால், அச்சமயம் ஒரு பெரிய பணக்காரர் அவருக்கு இரண்டாம் வகுப்பு 'டிக்கெட்' வாங்கிக் கொடுத்து வழி அனுப்பி வைத்திருந்தார்.

விவேகானந்தர் இருந்த வண்டியில் இரண்டு வெள்ளைக்காரர்களும் இருந்தனர். அவர்களுக்கு விவேகானந்தரைப் பார்க்க வேடிக்கையாயிருந்தது.

"இந்தப் பரதேசியைப் பாரடா! பெட்டி இல்லை; படுக்கை இல்லை; சாப்பிட உணவும் இருப்பதாகத் தெரியவில்லை. காவி உடை உடுத்துக் கொண்டு கவலையில்லாமல் 'கொழு கொழு' என்று இருக்கிறானே!" என்றான் ஒருவன்.

"ஆமாம், இவன் கெட்ட கேட்டுக்கு இரண்டாம் வகுப்பு வேறு!" என்றான் மற்றவன்.

உடனே இருவரும் 'கொல்'லென்று சிரித்தனர். இப்படியே அவர்கள் விவேகானந்தரைக் கேலி செய்து பொழுது போக்கிக் கொண்டிருந்தனர். விவேகானந்தருக்கு ஆங்கிலம் தெரியாது என்பது அவர்களின் எண்ணம். இல்லாவிட்டால், அப்படியெல்லாம் பேசத் துணிச்சல் வருமா?

வழியில் வண்டி ஒரு நிலையத்தில் நின்றது. உடனே, விவேகானந்தர் தலையை வெளியே நீட்டிப் பார்த்தார். 'புகைவண்டி நிலையத் தலைவர்' அங்கு வந்தார்.

அவரைப் பார்த்து, "இங்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்குமா?" என்று அழகாக ஆங்கிலத்தில் விவேகானந்தர் கேட்டார். அவர் ஆங்கிலத்தில் பேசியதைக் கேட்டதும், அந்த ஆங்கிலேயர் இரு


வரும் திடுக்கிட்டனர். பிறகு, விவேகானந்தரை நோக்கி, "ஏனய்யா, உமக்கு ஆங்கிலம்கூடத் தெரியுமா? அப்படியானுல், நாங்கள் இவ்வளவு நேரமாகப் பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டு ஏன் சும்மா இருந்தீர்?" என்று கேட்டனர்.

"நான் மூடர்களைக் காண்பது இது வன்று முதல் தடவை!" என்று அழுத்தம் திருத்தமாகச்சிரித்துக் கொண்டே சொன்னுர் விவேகானந்தர்.

"என்ன, நாங்களா மூடர்கள்!" என்று கேட்டுக் கொண்டே இருவரும் விவேகானந்தரைத் தாக்க வந்தனர். விவேகானந்தர் பயந்துவிட வில்லை!

"ஓஹோ! புத்தியைத்தான் உபயோகப்படுத்தத் தெரியவில்லை. சக்தியையாவது உபயோகப்படுத்தலாம் என்று பார்க்கிறீர்களா? நான் அதற்கும் தயார்தான். உம், வாருங்கள்; பார்க்கலாம்" என்று கூறி சட்டை விளிம்புகளை மடித்துவிட்டுக் கொண்டே அருகில் வந்தார். அவருடைய திடமான உடலையும், திரண்ட தோள்களையும், வலிமை மிக்க கைகளையும் பார்த்த அவர்கள் நடுநடுங்கி விட்டனர். பேசாமல் பெட்டிப் பாம்புகள் போல் அடங்கி விட்டனர்!





# பதினேரு வயதில் பாட்டுக் கட்டியவர்!

அப்போது தாகூருக்குப் பதினேரு வயதுதான் இருக்கும். அந்த வயதிலேயே அவர் அழகாகப் பாட்டுக்கள் எழுத ஆரம்பித்துவிட்டார்!

அவருடன் படித்த மாணவர்களில் சிலர், "அடடா! இவன் எவ்வளவு அழகாகப் பாடல்கள் எழுதுகிருன்!" என்று புகழ்ந்தார்கள். சிலர், "இவனுவது; பாட்டு எழுதுவதாவது! யாரோ இயற்றிய பாடல்களை எழுதி வைத்துக்கொண்டு கதை அளக்கிருன்!" என்றனர்.

இந்தச் செய்தி எப்படியோ பள்ளித் தலைவர் கோவிந்த பாபுவுக்கு எட்டியது. உடனே அவர் தாகூரை அழைத்தார். ஒரு விஷயத்தைக் கொடுத்து, அதைப் பற்றிப் பாட்டு எழுதச் சொன்னார். தாகூர் மிகவும் அழகான பாட்டொன்றை எழுதினார். எல்லோருக்கும் படித்துக் காட்டினார். அதைக் கேட்டு எல்லோரும் 'ஆ!' என்று வாயைப் பிளந்தனர்.

இந்த விஷயம் அப்பாவின் காதிலும் விழுந்தது. அவர் மிகவும் பெருமைப்பட்டார். அன்று முதல் அவர் தாகூரின் பாடல்களை அடிக்கடி கேட்டு மகிழ்வார்; தாகூரை மிகவும் பாராட்டுவார். அப்பா மட்டுமென்ன; தாகூரின் குடும்பத்தார் எல்லோருமே அவரைப் பாராட்டுவார்கள். ஆனால், ஒரே ஒருத்தி மட்டும், "ப்பூ! இது என்ன பாட்டா! உனக்கு அவரைப்போல் எழுதத் தெரியவில்லையே! இவரைப்போல் எழுதத் தெரியவில்லையே!" என்று குத்தலாகக் கூறுவாள். அவள் யார் தெரியுமா? தாகூரின் அண்ணிதான்!

அண்ணி கூறுவதைக் கேட்டுத் தாகூர் கவலைப் படமாட்டார். அண்ணி எப்போதுமே அப்படித் தான். தாகூருடன் ஏதாவது வம்பு இழுத்துக் கொண்டே இருப்பது அவளுக்கு வழக்கம்.

∴ ∴ ∴

தாகூரின் அண்ணிக்குக் கிளி, மைனா, அணில் முதலியவற்றை வளர்ப்பதில் அளவில்லாத விருப்பம் உண்டு. வீட்டில் அவற்றை எல்லாம் கூண்டில் அடைத்து வளர்த்து வருவாள்.

ஒருநாள், அவள் இரண்டு அணிற்பிள்ளைகளை வாங்கினாள். அவற்றைக் கூண்டிலே போட்டு

அடைத்து வைத்திருந்தாள். அச் செயல் தாகூருக்குப் பிடிக்கவில்லை. ஆனந்தமாக ஓடியாடித் திரியும் அணிற் பிள்ளைகளை அடைத்து வைப்பதை அவர் விரும்பவில்லை.

"அண்ணி, இந்த அணிற்பிள்ளைகளைப் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கிறது. வேண்டாம். இவற்றை விட்டுவிடு" என்று கெஞ்சிப் பார்த்தார்.

"பேசாமல் வாயை மூடிக்கொண்டு போ. உன் பேச்சைக் கேட்க நான் தயாராக இல்லை" என்று கூறிவிட்டாள் அண்ணி.

"சரி. வரட்டும். அண்ணிக்கு வாயால் சொன்னால் சரிப்படாது" என்று மனத்திற்குள்ளேயே கூறிக் கொண்டார் தாகூர்.

அன்று அண்ணி எங்கோ வெளியே போயிருந்தாள். அப்போது தாகூர் கூண்டின் அருகே மெதுவாகச் சென்றார். கூண்டைத் திறந்து இரண்டு அணிற்பிள்ளைகளுக்கும் விடுதலை அளித்து விட்டார். 'ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட்டோம்' என்று அவை ஆடிக் குதித்துக்கொண்டே ஓடி மறைந்துவிட்டன!

அண்ணி வீடு வந்ததும், கூண்டு வெறுங் கூண்டாக இருப்பதைப் பார்த்தாள். உடனே, தாகூருடன் போர் தொடுத்தாள். அண்ணி திட்டியதைக் கேட்டு தாகூர் வருந்தவில்லை. தாம் செய்த செயலை எண்ணி மகிழ்ச்சி யடைந்தார்.

∴ ∴ ∴

தாகூர் காலையில் பள்ளிக்குச் செல்வார். மாலை நாலரை மணிக்கு வீடு திரும்புவார். வீட்டுக்குள்

நுழையும் போதே உடற்பயிற்சி ஆசிரியர் எதிரே நிற்பார். அவர் சொல்லிக் கொடுக்கும் பயிற்சிகளைத் தாகூர் செய்து முடிப்பார். அதற்குள், சித்திரம் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர் வந்துவிடுவார். அவர் சித்திரம் போடச் சொல்லிக் கொடுப்பார். அவர் போனதும், ஆங்கிலப் பாடம் கற்றுக்கொடுக்க ஓர் ஆசிரியர் வருவார். ஆங்கிலப் பாடம் ஆரம்பமாகி விடும். ஆனால், அப்போது தாகூருக்குப் படிப்பில் கவனம் செல்லாது. தூக்கம் கண்ணைச் சுற்றும். வாய் கொட்டாவி விடும்.

தாகூர் ஆங்கிலப் பாடம் படிக்கும்போது ஸதீன் என்ற வேறு ஒரு பையனும் அவருடன் படித்து வந்தான். அவன் தூங்கமாட்டான். தூக்கம் வந்தாலும், கண்களில் சிறிது மூக்குப் பொடியைப் போட்டுக் கொள்வான். ஆனால், தாகூர் அப்படியெல்லாம் செய்யமாட்டார். பேசாமல் அங்கேயே படுத்துத் தூங்கிவிடுவார்.

ஓயாது, ஒழியாது பாடம் சொல்லிக் கொடுத்து வந்ததால், தாகூருக்குப் படிப்பில் மனம் செல்லவில்லை. அதனால்தான், அந்தக் காலத்தில் பள்ளிப் படிப்பு என்றால் தாகூருக்குப் பாகற்காயாகத் தோன்றியது.

∴ ∴ ∴

தாகூரின் அண்ணாவுக்குக் குதிரைச் சவாரி செய்வதில் அளவில்லாத பிரியம். அவருடைய மனைவிக்கும் குதிரைச் சவாரி செய்யத் தெரியும்.

அண்ணி குதிரைமேல் ஏறிச் செல்வதைப் பார்க்கும் போதெல்லாம், "அண்ணிகூடக் குதிரைச்

சவாரி செய்யக் கற்றுக்கொண்டுவிட்டாள். நாம் கற்றுக்கொள்ள வேண்டாமா?" என்று நினைப்பார்.

ஒருநாள், அண்ணுவிடம் தம்முடைய ஆசையை வெளியிட்டார். உடனே அண்ணு தாகூருக்கு ஒரு குதிரை வாங்கிக் கொடுத்துவிட்டார். அது மிகவும் பொல்லாத குதிரை. அது தாகூரைச் சுமந்து கொண்டு போகும்போது, வேண்டாத குறும்பு களெல்லாம் செய்யும். எத்தனையோ தடவைகள் தாகூரைக் கீழே தள்ளப் பார்த்திருக்கிறது. ஆனாலும், தாகூர் இப்படியும் அப்படியுமாக நழுவு வாரே தவிரக் கீழே விழுந்துவிடமாட்டார்! குதிரை யின் கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளு வார்! ஆனால், அந்தக் குதிரையின் முரட்டுத்தனம் அதிக நாள் நீடிக்கவில்லை. எப்படியோ தாகூர் அதை வசப்படுத்தி விட்டார்.

ஒருநாள், தாகூர் ஒரு பெரிய குதிரைமீது ஏறி ஊரைச் சுற்றிவந்தார். அப்போது அந்தக் குதிரை 'இந்தச் சிறு பையன் என்னை அடக்குவதாவது!' என்று எண்ணியதோ, என்னவோ; திடீரென்று வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தது. ஒரே தாவில் வீட்டுக்குள் ஓடி, அங்குள்ள முற்றத்தில் போய் நின்றது. நல்லவேளை! வீட்டின் முகடு தாகூரின் தலையைப் பதம் பார்க்காமல் விட்டுவிட்டது! அன்று முதல் தாகூர் அந்தக் குதிரையின் அருகே கூடப் போவது கிடையாது!

∴ ∴ ∴ ∴

ஒருநாள் தோட்டக்காரன் அழகான பூக்களைப் பறித்து வந்தான். அவற்றை வீட்டிலிருந்த கிண்ணங்களில் வைத்தான். தாகூருக்கு அந்தப் பூக்களைப் பார்த்ததும், ஓர் ஆசை தோன்றியது.

"இந்தப் பூக்களை நன்றாகப் பிழியவேண்டும். உடனே அவற்றிலிருந்து சாறு வரும். அந்தச் சாற்றில் நமது கட்டைப் பேனாவைத் தோய்த்து, அழகாகப் பாடல்கள் எழுத வேண்டும்" என்று நினைத்தார்.

நினைத்ததுபோல் செய்ய முயன்றார். சில பூக்களை எடுத்துக் கசக்கினார். பலங்கொண்ட மட்டும் பல்லைக் கடித்துக்கொண்டு பிழிந்து பார்த்தார். ஆனால், ஒரு சொட்டுச் சாறுகூட வெளிவரவில்லை.

உடனே, அவர் சாற்றைப் பிழிந்தெடுக்க ஓர் இயந்திரம் செய்யவேண்டுமென நினைத்தார். அண்ணாவிடம் சொன்னார். அண்ணா அதை ஓர் வீண் ஆசை என்று நினைத்தார். இருந்தாலும், அருமைத் தம்பியின் மனம் நோக அவர் விரும்பவில்லை. உடனே தச்சனுக்கு ஆள் அனுப்பினார்.

தச்சன் வந்தான். தாகூர் அவனிடம், "ஐயா, ஒரு மரக்கோப்பையை எடுத்துக்கொள்ளுங்கள். அதன் நடுவே ஒரு குழவியை வைத்து அந்தக் குழவியை ஒரு சக்கரத்துடன் மாட்டிவிடுங்கள். சக்கரம் சுற்றும்போது குழவியும் சுற்றுமல்லவா ? அப்போது, கோப்பைக்குள் இந்தப் பூக்களை நான் கொட்டுவேன். உடனே சாறு வரும். அந்தச் சாற்றில் என் பேனாவைத் தோய்த்துப் பாட்டு எழுதுவேன். என்ன புரிந்ததா ?" என்றார்.

தாகூர் சொன்னபடியே இயந்திரம் தயாராகி விட்டது. உடனே, தாகூர் ஆவலுடன் பூக்களை உள்ளே கொட்டிச் சக்கரத்தைச் சுற்றிப்பார்த்தார். எவ்வளவுதான் சுற்றியும், ஒரு சொட்டுச் சாறும் கிடைக்கவில்லை.

ஏமாற்றத்துடன் தாகூர் கசங்கிய பூக்களைப் பார்த்தார். பார்த்ததும், "அடடே! சற்று முன்பு எவ்வளவு அழகாக இருந்தன இந்தப் பூக்கள் ! இப்போது, இப்படி ஒன்றுக்கும் உதவாமல் போய்விட்டனவே ! எல்லாம் இந்த இயந்திரத்தின் வேலை தான்" என்று அந்த இயந்திரத்தை வெறுப்புடன் பார்த்தார்.

அதற்குப் பின் தாகூர் எந்த இயந்திரத்தையும் தொடுவதே இல்லை. 'ஸிதார்' போன்ற வாத்தியங்களைக்கூடத் தொடமாட்டாராம் !

∴ ∴ ∴ ∴

தாகூருடைய அண்ணுவுக்கு வேட்டையாடுவதில் விருப்பம் அதிகம். ஒரு நாள் அவர் தாகூரையும் அழைத்துக்கொண்டு யானையின் மீது ஏறி வேட்டைக்குப் புறப்பட்டார். யானைப் பாகனும் வந்தான்.

யானை மிகவும் கம்பீரமாகக் காட்டுக்குள் நுழைந்தது. அப்போது தாகூருக்குப் புலியைப் பற்றிய ஞாபகம் வந்தது. 'புலி வந்துவிடுமோ! புலி வந்துவிடுமோ!' என்று நினைத்து நினைத்துப் பயந்துகொண்டிருந்தார்.


ஒரு சமயம் புலியைப் பற்றிப் பேசும்போது அவருடைய பள்ளித் தோழன், 'புலி யானையைக் கண்டால், உடனே ஒரே பாய்ச்சலாக அதன் முதுகிலே பாயும். அப்புறம் யானையின் கதி அதோ கதிதான்! என்று சொன்னது நினைவுக்கு வந்தது.

"ஐயோ ! இப்போது புலி வந்து யானையின் முதுகை நோக்கிப் பாய்ந்தால், என்ன செய்வது?

இதன் முதுகில் நாமல்லவா இருக்கிறோம்! நம் கதி என்னகும்!'' என்று நினைத்துப் பயந்துகொண்டே இருந்தார்.

ஓரிடத்தில் வந்ததும் யானை 'சட்'டென்று நின்றது! 'என்ன விஷயம்?' என்று தாகூர் மெதுவாகத் தலையை நீட்டிப் பார்த்தார். பார்த்ததும் திடுக்கிட்டார். ஒரு புலி அங்கே நின்றுகொண்டிருந்தது! ஆனால், நல்லகாலம், அது பின்னல் திரும்பிப் பார்க்கவில்லை! வேகமாகப் புறமுதுகு காட்டி ஓடஆரம்பித்தது. 'நல்லவேளை; இன்று நாம் தப்பிவிட்டோம்' என்று எண்ணித் தாகூர் மகிழ்ந்தார்.


''நல்ல காலம்; தாகூர் அன்று தப்பிவிட்டார்!'' என்று நினைத்து நாமும் மகிழ்ச்சி அடைவோம். இல்லையேல், அவருடைய அருமையான பாடல்களை இன்று உலகெல்லாம் படித்து இன்புற முடியுமா? அல்லது, 'நோபல் பரிசு பெற்ற கவிஞர் ஒருவர் எங்கள் நாட்டிலும் இருந்தார்' என்று கூறி நாம் பெருமைப்படத்தான் முடியுமா?





# இவர்கள் யார்?

- புலியைத் தேடிப் புறப்பட்டவர்!
- எட்டு ரூபாயில் படித்தவர்!
- கணக்குப் போடாமல் கவிபாடியவர்!
- சொந்தக் கையிலே சூடுபோட்டுக் கொண்டவர்!
- பெயர் தெரியாத கவிஞர்!
- சரியான விடைக்குத் தண்டனைபெற்றவர்!
- பதினோரு வயதில் பாட்டுக் கட்டியவர்!







---

கண்டு பிடியுங்கள்!

---









JEEVAN PRESS, MADRAS-600 005.